Registered as a News paper in Ceylon

பிலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு |  |
| --- | --- |
| சந்தா விபரம் |  |
| வாரப்பதிப்பு உட்பட |  |
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் ᴐ யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 7 ஆம் நாள் ஷவ்வால் 23 (20-3-63) புதனகிழமை இதழ் 40

# குலரத்ன கல்வி மந்திரி ஆவார் ?

## அரசாங்க வட்டாரத்தில் அபிப்பிராயம்

கொழும்பு, செவ்வாய்

**சுயேச்சை அங்கத்தவரான அம்பலாங்கொடை எம். பி. திரு. பி. டி. எஸ். குலரத்ன இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினர் அமர்ந்திருந்த இடத்தை விட்டு அரசாங்க கட்சியினருடன் சென்றுஅமர்ந்தார்.**

**இந்த நிகழ்ச்சியை அவதானித்த அரசாங்க எம். பி.க்கள் கைதட்டி ஆரவாரம்செய்தனர்.**

திரு. குலரத்ன, மாவனல்லை எம். பி. திரு. ஆர். ரத்னயக்காவின் பக்கத்தே சென்று அமர்ந்தபோது அரசாங்கக் கட்சி எம். பி. க்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

முதலில் யு. என். பி. யின் சார்பில் போட்டியிட்டு பார்லிமெண்ட் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட குலரத்ன அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் விஷயம் விவாதிக்கப்பட்ட சமயத்தில் யு. என். பி. யின் கொள்கையை ஏற்றுக்கொள்ளாது விலகி சுயேச்சையாக இதுவரை காலமும் இருந்து வந்தார்.

திரு. குலரத்ன அரசாங்கக் கட்சியில் இப்பொழுது சேர்ந்துள்ளதைத் தொடர்ந்து அவருக்கு கல்வி மந்திரிப் பதவியோ அல்லது நிதிமந்திரிப் பதவியோ அளிக்கப்படலாமென அரசாங்கக் கட்சியினருள் அபிப்பிராயம் நிலவுவதாகத் தெரியவருகிறது.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழு சில மாதங்களுக்குமுன் அரசாங்கக் கட்சியைச் சேராதவர்களுக்கு மந்திரிப்பதவி அளிப்பதில்லைஎனத் தீர்மானித்திருந்தது.

இவ்விரு தீர்மானம் திரு குலரத்னவை அரசாங்கக்கட்சியில் சேரத் தூண்டியிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.

## அரசாங்கக் கட்சியிலிருந்து வீரசேகரா விலகினர்

கொழும்பு, செவ்வாய்

**இரத்தினபுரி எம். பி. திரு. டி. பி. ஆர். வீரசேகரா இன்று பார்லிமெண்டில் அரசாங்கக் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சி ஆசனத்தில் போய் அமர்ந்தார். மூன்று மாதங்களுக்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகிய இரண்டாவது எம். பி. திரு. வீரசேகரா ஆகும்.**

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று பிற்பகல் சபாநாயகர் ஆர். எஸ். பெல்பொல தலைமையில் கூடியபோது, கேள்வி நேரத்தின்போது திரு. வீரசேகரா தமது ஆசனத்திலிருந்து எழுந்து எதிர்க்கட்சிப் பகுதிக்குச் சென்று ஒரு ஆசனத்தில் அமர்ந்தார்.

இதன்பின் தாம் அரசாங்கக் கட்சியைவிட்டு வெளியேறியதற்கான காரணத்தைத் தெரிவிப்பதற்காக ஒரு அறிக்கை விடுவதற்கு திரு. வீரசேகரா எழுந்தபொழுது, அந்தச் சலுகை மந்திரிமார்களுக்கு மட்டுமே இருப்பதாகத் தெரிவித்து அனுமதியளிக்க சபாநாயகர் மறுத்துவிட்டார்.

திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும், சேபால தகநாயக்காவும் அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேறியபோது சபையில் அறிக்கைவிட அனுமதியளிக்கப்பட்டார்களென்று திரு. ரூபர்ட் குணவர்த்தன உட்பட மற்றும் பல அங்கத்தவர்கள் சபாநாயகருக்குச் சுட்டிக்காட்டினர்.

இதன்பின் சந்தர்ப்பம் வரும்பொழுது அறிக்கைவிட அனுமதி கொடுப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

## நேரடி இயக்கத்துக்கு 21 திட்டங்கள்

### நடவடிக்கைக் குழு பரிசீலனை செய்யும்

யாழ்ப்பாணம், புதன்

**1961-ம் ஆண்டு நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரக இயக்கத்தின்போது கட்சியின் நேரடி நடவடிக்கைக்குழு 21 போராட்டத்திட்டங்கள் தயாரித்திருந்ததாகவும் இத்திட்டங்களில் சிலவற்றை இவ்வாரம் கொழும்பில் கூடி ஆராயவிருக்கும் நேரடி நடவடிக்கைக்குழு பரிசீலனை செய்யுமென்றும் அறியப்படுகிறது.**

**மறியல் இயக்கம் போன்ற திட்டங்கள் எதுவும் ஆலோசிக்கும் நோக்கம் இல்லையென்றும் சட்டமறுப்பு நடவடிக்கைகள் பற்றித்தான் நேரடி நடவடிக்கைக்குழு ஆராயுமென்றும் தெரிகிறது.**

இதற்கிடையில் நேரடி நடவடிக்கைக்குத் தொண்டர்களைச் சேர்க்கும் வேலைகளில் தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் பலரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பாக்கு நீரிணையை இன்று கடப்பார்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சட்டக் கல்லூரி மாணவன் ஆனந்தன் (19 வயது) பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க ஆரம்பிப்பார். பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்த நவரத்தினசாமியின் உறவினரான இளைஞன் ஆனந்தன் சரியாக நான்கு மணிக்கு தமது முயற்சியை ஆரம்பிப்பார். நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறும் வைபவத்தின் பின் பெரியோர்கள் ஆசி கூற நண்பர்களும் உறவினர்களும் வாழ்த்துக் கூற வி. எஸ். ஸி. ஆனந்தன் நீச்சலை ஆரம்பிப்பார்.

பார்லிமெண்ட்

## 'வகுப்புவாத ரீதியில் அரசாங்கம் நோக்காது'

### கம்யூனிஸ்ட் அங்கத்தவர் கேள்விக்கு பீலிக்ஸ் பதில்

கொழும்பு, செவ்வாய்

ஒருவருடத்திற்கு முன்னர் கம்புறுப்பிட்டியாவிலுள்ள பாவற்குளத்துக்குச் சென்று குடியேறி அங்கு செல்வந்தர்களாகியுள்ள மூன்று சிங்கள வர்த்தகர்களை, தமிழர்களையும் முஸ்லிம்களையும் கொண்ட ஒரு கோஷ்டி துன்புறுத்தி வருவதாகவும் இதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கம்யூனிஸ்ட் அங்கத்தவரான கம்புறுப்பிட்டியா எம். பி. திரு. பேர்ஸி விக்கிரமசிங்கா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் இலாகா அற்ற மந்திரியும், பிரதம மந்திரியின் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைக் கோரியபோது திரு. பீலிக்ஸ இவ்வித விஷயங்களை வகுப்புவாத ரீதியில் அரசாங்கம் நோக்காதெனத் தெரிவித்தார்.

திரு. விக்கிரமசிங்கா தமது புகாரில் தெரிவித்ததாவது:-

கம்புறுப்பிட்டியாவிலிருந்து ஒரு வருடத்துக்கு முன்னர் வவனியாவிலுள்ளபாவற்குளத்திற்குச் சென்ற மூன்று சிங்கள மக்கள் பாவற்குளத்தில் வர்த்தகத்துறையில் ஈடுபட்டுச் செல்வந்தரானார்கள். தமிழர்

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று

வண்ணை சிவன் கோவில் கொடியேற்றம் பகல் 12 மணி.

புகையிலை — மிளகாய் — கத்தரி — முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

மெற்றசிஸ்ரொக்ஸ்

METASYSTOX

T'GRAMS ROYAEL ROYAL DISPENSARY PHONE 397 JAFFNA

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி
6%
உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

**காங்கேசன்துறை பட்டினசபை**

காங்கேசன் துறைப் பட்டின சபையின் பாவிப்புக்காக 4அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள ஒரு கொடிச் சீலையில் தரையில் இரு எருதுகள் பூட்டப்பட்ட ஏரில் ஒரு உழவன் பிடித்துழுகிற மாதிரியும், ஒரு தென்னை மரமும் ஒரு பனை மரமும் நிற்கிற மாதிரியும், கடலில் ஒரு வள்ளத்திலிருந்தொருவன் தண்டு வலிக்கிற மாதிரியும் சித்திரங்கள் வரையப் பெற்றதான தொன்றைச் சரிக்கட்டித் தருவதற்கு முதலில் ஒரு கடதாசியில் குறிப்பிட்ட சித்திரங்கள் வரையப் பெற்றுத் தலைவர், பட்டினசபை, காங்கேசன் துறை என்ற விலாசத்திற்கு 25-3-63-ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். கிடைத்த சித்திரங்களில் சபைக்குத் திருப்தியானதொன்று தேர்ந்தெடுக்கப்படுங்கால் அக்குறிப்பிட்ட சித்திரக்காரரைக் கொண்டு கொடிச்சீலை சரிக்கட்டும் ஒழுங்குகள் செய்யப்படும்.

மு. திடவீரசிங்கம்,
தலைவர்,
பட்டின சபை,
காங்கேசன் துறை.

பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன் துறை.
15-3-63 779

## Jaffna municipal Council

Tender Notice

Tenders for the Construction of a Retaining wall from Clock Tower to Hospital Road junction in ward No 1 will be received by me from registered contractors up to 12 noon on 25th March 1963. The tender forms will be issued up to 3 p. m, o 2-3-63. n

2. Tenders should be in duplicate on forms obtainable from the Municipal Works Engineer, Jaffna up to 3. p.m. on 22-3-1963 on payment of rupees fifty (Rs. 50-00) as tender deposit and rupees five (Rs. 5-00) as cost of a tender form which is not refundable. The tender deposit will be refunded after the successful tenderer enters into an agreement.

3. Further particulars may be obtained from the Municipal works Engineer, Jaffna during office hours.

D. D. Jayasinghe,
Commissioner,
Jaffna municipal council.
Town Hall,
Jaffna, 13th March, 1963.

782

## வரி விளம்பரம்

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## அந்தரங்க சாட்சியம்

கொழும்பு, செவ்வாய்
பரீட்சைக் கமிஷனர் திரு. எஸ். ஈ. ஆர். பேரின்பநாயகம், கல்வி இலாகாவின் நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த உதவி டைரக்டர் ஆனந்த குருகே ஆகிய இருவரும் நேற்றைய தினம் பல்கலைக் கழகக் கமிஷன்முன் அந்தரங்கமாகச்சாட்சியமளித்தனர் கமிஷன் முன் இன்றைய தினம் இலங்கைப் பல்கலைக்கழக வைத்தியப் பகுதி தலைமைப் பேராசிரியர் திரு. அபயரத்ன சாட்சியமளிக்கிறார். பேராதனை, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு பிரிவுப் பேராசிரியர்களும் கமிஷன் முன் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள்.

## குற்றவாளிகளுக்குச் சலுகை?

கொழும்பு, செவ்வாய்
சிறைவாசத்திற்கு ஏதுவாயிருந்த குற்றத்தைச் செய்த பொழுது உத்தியோகத்திலிருந்தவர்களையும், இப்பொழுது தொடர்ந்து உத்தியோகம் செய்யத் தகுதியுடையவர்களையும் பகலில் அவர்களின் வேலையைப் பார்க்க அனுமதித்து இரவில் மட்டும் சிறைச்சாலையில் தங்குவதற்கான ஒழுங்குகள் செய்வதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் ஆலோசித்துவருகின்றனர்.

நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகளை அவர்களின் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்னர் சிறைச்சாலையிலிருந்து வெளியேற்றி அக் குறிப்பிட்ட கால எல்லைவரையும் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கக்கூடிய ஒழுங்கு செய்வதுபற்றியும் அதிகாரிகள் பரிசீலனை செய்துவருகிறார்கள்.

டோக்கியோவில் நடைபெற்ற சகலநாட்டு சிறைச்சாலை அதிகாரிகள் மகாநாட்டில் குற்றவாளிகளுக்கு இவ்விதமான சலுகைகள் செய்வது பற்றி விவாதிக்கப்பட்டது. இலங்கையில் குற்றவாளிகளுக்கு இவ்வித சலுகைகள் கொடுக்கப்பட்டால் அவர்களுக்கு உணவுக்குச் செலவிடப்படும் பணமும் மிச்சப்படுத்தப்படலாம். எனவும் நம்பப்படுகிறது.

### தேவை

மலிபான் கம்பெனியாரின் வடமாகாண சேல் ஏஜண்டின் கீழ் வேலை செய்ய பின்வரும் உத்தியோகங்களுக்குப் பிணைப் பணம் செலுத்தக்கூடிய தகுதியுடையவர்கள் தேவை.

1. வான்விற்பனையாளர் ஒருவர்:
ஜே. எஸ். சி. சித்தியடைந்தோர் விரும்பத்தக்கது. பிணைப்பணம், சம்பளம் நேரில்.

2. கந்தோர் உத்தியோகத்தர் இருவர்:
எஸ். எஸ். சி. சித்தியடைந்தோர் விரும்பத்தக்கது. பிணைப் பணம், சம்பளம் நேரில்.

பைசிக்கிள் விற்பனைக்கு ஐவர்:
பிணைப்பணம் சம்பளம் நேரில்.

மேற்குறிப்பிட்ட உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. யாவும் நேரிலேயே ஒழுங்கு செய்யப்படும். 25-3-63க்கு முன்னர் சந்திக்க வேண்டும்.

பி. கே. ராஜரத்தினம்,
மலிபான் சேல் ஏஜன்ட்,
1/10, பலாலி வீதி
2-ம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.
754

### நடிகைகள் தேவை

கலைவாணர் நாடக மன்றம் தயாரித்துக் கொண்டிருக்கும் புதியநாடகங்களில் நடிப்பதற்கு நடிகைகள் உடனடியாகத்தேவை. முன் நடித்துப்பழக்கமில்லாவிடினும், நடிக்க ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். 25-3-63 க்கு முன் விண்ணப்பிக்கவும். செயலாளர், வண்ணை கலைவாணர் நாடக மன்றம், 94, 96, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 781

## பாடசாலை தேகப்பயிற்சிப் போட்டி

புளியங்குளம், திங்கள்
புளியங்குள வட்டார உயர்தர பாடசாலைகளின் தேகப் பயிற்சிப் போட்டி வட, கீழ் பிராந்தியங்களின் உதவி வித்தியாதிகாரி திரு. ஏ. பி. இராஜேந்திரா தலைமையில், ஓமந்தை அரசினர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வவனியா மாவட்ட தேகப் பயிற்சி வித்தியாதரிசி திரு. வி. தங்கராசாவால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் போட்டியின்போது யாழ். மாவட்ட தேகப்பயிற்சி வித்தியாதரிசி திரு. எஸ். சீவரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

தலைவர் தமது குறிப்புரையில் இப்போட்டியிற் பங்குபற்றிய ஓமந்தை அரசினர் மகாவித்தியாலயம், நொச்சிமோட்டை அரசினர் பாடசாலை, புதுக்குளம் அரசினர் பாடசாலை ஆகிய பாடசாலைப் பிள்ளைகளின் தரம் மிக மிக உயர்ந்ததாக இருக்கின்றதெனப் பாராட்டினர்.

## வவனியாவில் கைப்பந்தாட்டப்போட்டி

வவனியா, செவ்வாய்
வவனியா நீர்ப்பாசன இலாகா விளையாட்டுக் கழகம், வவனியா அரசாங்க விளையாட்டுக் கழகங்களிடையே ஒரு கைப்பந்தாட்டப் போட்டியை இம் மாத இறுதியில் வவனியா நீர்பாசன இலாகா விடுதிக்கருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடத்தவிருக்கிறது. இதில் ஒன்பது அரசாங்க விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. வெற்றி பெறும் விளையாட்டுக் கழகத்துக்கு அம்பலவாணர் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படும். இன்னும் இதர நாலு பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. கைப்பந்தாட்டப்போட்டி சம்பந்தமாக சகல ஏற்பாடுகளையும் நீர்ப்பாசன விளையாட்டுக் காரியதரிசி திரு. எம். எஸ். ஸ்ரீகாந்தன் நீர்ப்பாசன இலாகா உத்தியோகஸ்தர்கள் திரு எம். அலோசியஸ், திரு. எம். ராசையா ஆகிய மூவரும் செய்து வருகிறார்கள் போட்டிகள் ஒரு மாதகாலம் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மகாவித்தியாலய மாணவர் வெற்றி

வவனியா, செவ்வாய்
வவனியா நீர்ப்பாசன இலாகா விளையாட்டுக் கழக கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் வவனியா சிங்கள மகாவித்தியாலய மாணவர்கள் விளையாட்டுக் கழக கோஷ்டிக்குமிடையே ஒரு சிநேக பூர்வமான கைப்பந்தாட்டப்போட்டி கடந்த வாரம் நீர்பாசன இலாகா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. சிங்கள மகா வித்தியாலய மாணவர்கள் மிகவும் திறமையாக விளையாடி வெற்றிபெற்றனர். திரு. கந்தசாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## ஹாட்லி வெற்றி

பருத்தித்துறை, செவ்வாய்
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்க போட்டியில் ஹாட்லிக்கல்லூரி ஒரு ரன் 5 விக்கெட்டுகளால் வெற்றி [illegible]டியுள்ளது.

இரு கல்லூரிகளும் இறுதி வரைதிறமையாக விளையாடின.

முதலாவது ஆட்டத்தில் ஹாட்லி 221 ரன்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 96ரன்களையும் எடுத்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இரு ஆட்டங்களிலும் முறையே 162, 154 ரன்களை எடுத்தது.

## ஜயவர்த்தன மகிழ்ச்சி

வெலிமடை, செவ்வாய்
"இலங்கையைப்போன்ற ஒரு சிறிய நாடு சர்வதேச உலக அரங்கில் பகைவர்களைத் தேடிக்கொள்ளக் கூடாது. அமெரிக்க உதவிநிறுத்த விஷயத்தில் இடதுசாரிக் கட்சிகளைப் பின்பற்றி கம்யூனிஸ வழியில் அரசாங்கம் செல்லாததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்."

இவ்வாறு கொழும்பு தெற்கு முதல் எம். பி. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன யூ. என். பி.க் கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அமெரிக்க உதவிநிறுத்தத்தால் இடதுசாரிக் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள் அப்படியானால், இந்த இடதுசாரி முன்னணி அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்வது கேலித்தனமானதாகும் எனவும் திரு. ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

ஜனநாயக நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் மக்கள் முன்னிலையில் நாட்டின் உடனடிப் பிரச்னைகள் பற்றிய தமது கொள்கைகளை வெளியிடவேண்டியது அவசியமெனவும் அவர் தெரிவித்தார்.

**டெஸ்ட் கிரிக்கெட்**

## இங்கிலாந்து வெற்றி

வெலிங்டன், மார்ச் 19
இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்குமிடையில் நடைபெற்று வந்த மூன்றாவது கிரிக்கட் "டெஸ்ட்" போட்டியின் இறுதி நாளான இன்று இங்கிலாந்து கோஷ்டி 7 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. மூன்று "டெஸ்ட்" ஆட்டங்களிலும் இங்கிலாந்துக் கோஷ்டியே வெற்றியீட்டியது.

## ஆசிரியர் ஓய்வு கல்வியைப் பாதிக்கும்

**— பிரதம நீதியரசர்**

காலி, செவ்வாய்
தகுதியுடைய, அனுபவமுடைய, திறமையுடைய ஆசிரியர்களை ஓய்வுகால எல்லை வருமுன்னர் ஓய்வு பெற அனுமதிப்பது கல்வியைப் பெரிதும் பாதிக்கும் என பிரதம நீதியரசர் திரு. எச் பசநாயக்கா மகிந்தாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஈ. ஏ. விஜயசூரியாவின் திரைப்படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியத் தொழிலில் நல்ல வருமானம் இல்லாததால் பல ஆசிரியர்கள் ஏழைகளாக இருந்தாலும் அவர்களே நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்கும் தொழிற்சாலைகள் என பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வழக்கறிஞர்கள் வழக்காளிகளைத் தேடிச் செல்லாமல் தம்மிடம் வரும் வழக்காளிகளுக்காகவே சேவை செய்தனரென்றும் ஆனால் இப்பொழுது தமது கட்சிக்காரரிடமிருந்து வழக்கறிஞர்களும் புரக்டர்களும் அதிகப் பணம் பறிப்பதாகப் புகார் கூறப்படுவதாகவும் திரு. பசநாயக்கா மேலும் குறிப்பிட்டார்.

மகிந்தாக் கல்லூரி அதிபர் திரு. விஜயசூரியா பேசுகையில் ஆசிரியர்களை இடமாற்றும் விஷயத்தில் அரசியல்வாதிகள் தலையிட்டு வீண் சச்சரவு விளைவித்து வருவதாகக் கூறினர்.

## ரயில் நேரம்

| யாழ்ப்பாணம் | | கோட்டை | |
|---|---|---|---|
| காலை | 5-40+ | பி. ப. | 1-20 |
| காலை | 7-25 | மாலை | 7-15 |
| பி. ப. | 2-26 | இரவு | 10-15 |
| மாலை | 6-36 | காலை | 5-15 |
| மாலை | 8-52* | காலை | 6-15 |
| கோட்டை | | யாழ்ப்பாணம் | |
| காலை | 6-00 | பி. ப. | 1-25 |
| காலை | 6-45 | மாலை | 5-52 |
| பி. ப. | 2-15 | இரவு | 9-55 |
| மாலை | 7-15 | காலை | 5-03 |

+ஞாயிறு இல்லை
*ஞாயிறு மட்டும்

ப்ரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது
'ப்ரீடம்' மார்க் கற்பூரம்
என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள்,
ப்ரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்,
மினுவாங்கொட.

# சீன-பாக். எல்லைஒப்பந்தம்:பாதுகாப்புசபைக்கு

# இந்தியா ஆட்சேபம்

## “ஐ. நா. தீர்மானத்தை மீறிய சட்டவிரோதமான செயல்”

நியுயோர்க், மார்ச் 19

**காஷ்மீர் சம்பந்தமாக சீனாவுடன் பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளது குறித்து ஐ. நா. பாதுகாப்பு சபையிடம் இந்தியா ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் இந்த ஆட்சேபக் கடிதம் பாதுகாப்புசபைத் தலைவரிடம் சென்ற சனிக்கிழமை சேர்ப்பிக்கப்பட்டது.**

சீனாவுடன் காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தான் ஒப்பந்தம் செய்து கொண்டது பாதுகாப்பு சபையின் தீர்மானத்துக்கு முற்றிலும் முரணானது என்று ஆட்சேபக் கடிதம் கூறுகிறது.

ஒரு ஆக்கிரமிப்பாளரான பாகிஸ்தான் தனக்குச் சொந்தமாகமட்டுமல்லாது மற்றொரு ஆக்கிரமிப்பாளரான சீனாவுக்கும் சாதகமாக இந்த ஒப்பந்தம் செய்துள்ளதாக அந்தக் கடிதம் கூறுகிறது.

1948-ம் ஆண்டு ஜனவரி மாதத்திய பாதுகாப்புசபைத் தீர்மானத்தையும் 1949-ம் வருடம் ஆகஸ்ட் மாத ஐ. நா. பாதுகாப்புரிமைக் கமிஷன் தீர்மானத்தையும் இந்த ஒப்பந்தம் மீறி ஒருதரப்பான முறையில் பாகிஸ்தான் சீனாவுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக இந்தியா தனது ஆட்சேபக்கடிதத்தில் தெரிவித்துள்ளது.

தனக்கு ஆட்சி உரிமை இல்லாத ஒரு பிரதேசத்தின் எல்லை சம்பந்தமாக ஐ. நா. தீர்மானத்தையும் மீறி வேண்டுமென்றே பாகிஸ்தான் இந்த ஒப்பந்தத்தைச் செய்துள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

சீன-பாகிஸ்தான் ஒப்பந்தம் நிரந்தரமானதாக இருந்தாலும் சரி தற்காலிகமானதாக இருந்தாலும்சரி இந்த ஒப்பந்தத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்பதை 1962-ம் ஆண்டு மே மாதத்தில் ஐ. நா. பாதுகாப்புச்சபையில் இந்தியப் பிரதிநிதி மிகத் தெளிவாகத் தெரிவித்துவிட்டார் என்று இந்தியா தனது ஆட்சேபக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புசபை நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியா கோரவில்லை.

### சகாராவில் அணு ஆயுத சோதனை

#### மொரோக்கோ ஆட்சேபம்

ரபாத், மார்ச் 19

சகாராவில் பிரான்ஸ் அணு ஆயுத சோதனை நடத்தியுள்ளதாக மொரோக்கோ அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அணு ஆயுத சோதனை நடத்தியது பற்றி பாரிஸில் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. இந்த அணு ஆயுத சோதனைபற்றி பிரான்சுக்கு மொரோக்கோ ஆட்சேபம் தெரிவிக்கவிருக்கிறது.

பிரான்ஸின் அணு ஆயுத சோதனைபற்றி ஆலோசனை கலப்பதற்காக பாரிஸிலிருந்து அல்ஜீரிய ஸ்தானிகர் அல்ஜியர்ஸ் வந்து சேர்ந்துள்ளார்.

### பாகிஸ்தான் பெயர்மாற்ற மசோதா

டாக்கா, மார்ச் 19

பாகிஸ்தான் குடியரசை ‘பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு’ என அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்யும் புதிய மசோதாமீது பாகிஸ்தான் சட்டசபையில் விவாதம் ஆரம்பமாகியுள்ளது.

# “அரசியல் துறையில் சீனாவுக்கு தோல்வி”

## அமெரிக்க சஞ்சிகையில் நேருவின் கட்டுரை

புதுடில்லி, மார்ச் 19

“இந்தியாமீது சீனா வலுத்தாக்குதல் நடத்தியதினால் ராணுவ முறையில் சீனாவுக்கு தற்காலிக வெற்றி கிடைத்துள்ளபோதிலும் அரசியல் துறையில் அதற்குப் பெரும் தோல்விதான் கிடைத்துள்ளது” என்று இந்தியப் பிரதமர் நேரு அமெரிக்க் சஞ்சிகையொன்றுக்கு எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

“சீனர் இப்பொழுது தனிமைப்பட்டு நிற்கின்றனர். நடுநிலைமை நாடுகள் பல அதற்கு அளித்துவந்த ஆதரவு இப்பொழுது இல்லை. கம்யூனிஸ்ட் நாடுகளில் பலவும்கூட சீனாவுக்கு இப்பொழுது ஆதரவு அளிக்கவில்லை” என்று பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

“வலிமையும் பகைமையும் தான் சீனாவின் நம்பிக்கை. படை வலிமையால் எதையும் சாதிக்கலாமென்பது அதன் தத்துவம். இந்தியா போன்ற நடுநிலைமை நேச நாட்டின்மீது வலுத்தாக்குதல் நடத்தியதால் சீனா உலகில் ஆதரவை இழந்துவிட்டது. இது அதற்கு ஏற்பட்ட அரசியல் தோல்வி” என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

“சீனரின் செயல் காரணமாக இந்தியா பலம்பெற்று வளர்ந்துவருகிறது. தனது பாதுகாப்புக்காக இந்தியா அதிக தொகையைச் செலவிட நேரிட்டபோதிலும்கூட அடிப்படை நெறிகளில், ஜனநாயக அமைப்பில் மாறுதல் ஏற்படுத்திக்கொள்ளாது” என்றும் பிரதமர் நேரு கூறியுள்ளார்.

# பிரிட்டனுக்கு ‘போலாரிஸ்’ ஏவுகணைகள் கிடைக்கும்

வாஷிங்டன், மார்ச் 19

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையில் ‘போலாரிஸ்’ ஏவுகணைகள் சம்பந்தமாக வாஷிங்டனில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிட்டன.

போலாரிஸ் ஏவுகணைகளைப் பொருத்துவதற்கு நான்கு நீர்மூழ்கிக் கப்பல்களை பிரிட்டன் தனது செலவிலேயே அமைத்துக்கொள்ளவேண்டும். போலாரிஸ். ஏவுகணைகளை அமெரிக்கா கொடுக்குமென்றும் அவற்றில் வைக்கவேண்டிய ஆயுதங்கள் பிரிட்டனின் ஆயுதங்களாகவே இருக்கவேண்டுமென்றும் பேச்சுவார்த்தைகளில் தீர்மானிக்கப்பட்டது.

### மலேசியா

#### உச்சிமகாநாடு நடைபெறும்

கோலாலம்பூர், மார்ச் 19

மலேசியா அமைப்பு சம்பந்தமாகத் தோன்றிய நெருக்கடியான சூழ்நிலை இப்பொழுது தணிந்துள்ளதாகவும் இந்தோனேஷியா, மலாயா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் உச்சி மகாநாடு நடைபெறுமென்றும் மணிலாவிலுள்ள மலாயா ஸ்தானிகர் தெரிவித்தார்.

உச்சி மகாநாட்டுக்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு மந்திரிகள்கட்ட பூர்வாங்க மகாநாடு ஒன்று நடைபெறுமென நம்புவதாகவும் அவர் கூறினார்.

உச்சி மகாநாடு இப்பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

### ●ஆஸ்பத்திரிகளின் நிலைமைபற்றி இலாகாவிடம் ஆட்சேபம்

கொழும்பு, செவ்வாய்

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள ஆஸ்பத்திரி சபைகள், ஆஸ்பத்திரிகளில் உள்ள வசதிக்குறைவுகள்பற்றிச் சுகாதார இலாகாவிற்கு முறையிட்டுள்ளதுடன், பேட்டியும் கண்டுள்ளன. மற்ற வேலைகளுக்கு அரசாங்கம் பெருமளவில் பணம் செலவிட்டு வருவதாகவும் ஆனால் ஆஸ்பத்திரிகளைத் திருத்துவதற்கோ, உரிய வைத்திய வசதிகள் பற்றியோ கவனம் செலுத்துவதில்லையெனவும் இலாகாவிடம் தெரிவித்துள்ளன.

தேவையான மருந்துவகைகள் இல்லாததாலும் வேறு வைத்திய வசதிகள் இல்லாததாலும் நாட்டில் உள்ள பல ஆஸ்பத்திரிகளில் வைத்திய சேவை பெரிதும் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல ஆஸ்பத்திரிகளில் தண்ணீர் வசதி, மின்சார வசதி முதலியன இல்லாமல் நோயாளர் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் ஆஸ்பத்திரி சபைகள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளன. இவ் வசதிக் குறைவுகள் யாவற்றையும் தவிர்ப்பதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தை ஆஸ்பத்திரிசபைகள் கேட்டுள்ளன.

கொழும்பு, செவ்வாய்

சாதாரண தேயிலைகளின் விலையில் 10 தொடக்கம் 15 சதம் வரையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. தாழ்ந்த பிரதேசத்திலும், உயர்ந்த பிரதேசத்திலும் சாகுபடி செய்யப்பட்ட தரம் உயர்ந்த தேயிலைகளை விட மற்றைய மத்திய ரக தேயிலைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

# கான்பூரில் மேனனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## கார்மீது கல்வீச்சு

### ஆர்ப்பாட்டக்காரரை பொலிசார் கலைத்தனர்

கான்பூர், மார்ச் 17

கான்பூர் வந்துள்ள ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனன், இன்றிரவு மாணவர் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக வந்தபோது அவர் கார்மீது கற்கள் வீசப்பட்டன. கோஷம் எழுப்பிக்கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கல் வீசினர்.

ஸ்ரீ மேனன் காயமின்றித்தப்பினார். ஆனால் அப்போது அங்கிருந்த அடிஷனல் ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ கிரீஷ் சந்திராமீது ஒரு கல் பட்டது.

பொலிஸார் எச்சரிக்கை விடுத்ததன்பேரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றனர்.

இன்று ஸ்ரீ மேனன் கான்பூர் வந்து சேர்ந்தபோது ஸ்டேஷனில் சுமார் 200 ஜனசங்க ஊழியர்களும், ஆர். எஸ். எஸ். தொண்டர்களும் அவரைச் சூழ்ந்துகொண்டனர்.

அப்போது நடைபெற்ற கைகலப்பில் மேனன் ஆதரவாளர்களுக்கு அடி விழுந்தது. ஆனால் ஸ்டேஷனுக்குவெளியே காத்திருந்த காருக்கு ஸ்ரீ மேனன் பத்திரமாய் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ‘மேனன் திரும்பிப் போ’ என்று கோஷித்தனர்.

#### 144 தடையுத்தரவு

கான்பூரில் இன்று பி. ப. 1 மணிக்கு 144-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மார்ச் 20-ந் தேதி வரை இது அமுலிலிருக்கும்.

துப்பாக்கி, கழிகள், கற்கள் போன்றவற்றை பொது இடங்களுக்கு எடுத்துச்செல்வதை இந்த உத்தரவு தடை செய்கிறது. எந்தப் பொது இடத்திலும் கோஷம் எழுப்புவதையும், திட்டுவதையும், பிறருக்கு எரிச்சல் ஏற்படுத்தும் வகையில் சமிக்ஞைகள் செய்வதையும் இது தடை செய்கிறது.

கான்பூர் வாசிகள் சிலரும், நகருக்கு வந்துள்ள சிலரும் பொது அமைதியைக் குலைக்க உத்தேசித்திருப்பதாக பொலிசுக்குக் கிடைத்த தகவல்களிலிருந்தும், பிற நம்பகமான தகவல்களிலிருந்தும் தெரியவந்ததையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## வீட்டுக்குத் தீ வைத்து பிடில் வாசித்த நவீன ‘நீரோ’!

அகபல்கோ (மெக்ஸிக்கோ), மார்ச் 18

ரோம்நகரம் பற்றி எரியும்போது ரோமானிய சக்ரவர்த்தி நீரோ ஆனந்தமாக பிடில் வாசித்தானென்று ஒரு கதை. ரோம் நகருக்குத் தீ வைத்துவிட்டு மன்னன் பிடில் வாசித்தான் என்றும் கூறப்படுகிறது. இப்பொழுது நவீன நீரோ ஒருவரின் ‘கதை’ இங்கு நடைபெற்றுள்ளது. ‘குவாவாடிஸ்’ என்ற நவீனத்தைப் படித்துவிட்டு மெக்ஸிக்கோ வாசியொருவர் நீரோவின் வழியைப் பின்பற்ற முற்பட்டார். அவர் ஒரு பிடில் வாத்தியக்காரர். பெஞ்ஜமின் கோஞ்ஜலெஸ் என்பது அவரது பெயர். அகபல்கோவிலுள்ள தமது வீட்டின்மீது பெட்ரோலை ஏராளமாக ஊற்றி, தீ வைத்துவிட்டு, ஆனந்தமாகப்பிடில் வாசிக்க ஆரம்பித்துவிட்டார். வீட்டுக்குள் தமது மனைவியையும் குழந்தைகளையும் பூட்டிவிட்டார். தீயின் கொழுந்தைக்கண்ட அயலவர்கள் ஓடிவந்து தீயை அணைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றினர். நீரோவைப் பின்பற்றிய அசட்டுவீரர் பெஞ்ஜமின் ஓடிவிட்டார்!

### சைக்கிளில் சுற்றுப்பிரயாணம்

பருத்தித்துறை, செவ்வாய்

ஆத்தியடியைச் சேர்ந்த திருவாளர்கள் கே. ரி. ராஜசிங்கம், ரி. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் சமீபத்தில் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சைக்கிளில் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கின்றனர்.

இருவரும் தங்களது சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்வதன் முன்னர் இம்மாதம் 23-ந் திகதியன்று இலங்கையில் சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிப்பர் எனவும் இச் சுற்றுப்பிரயாண ஆரம்பத்தை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் தொடக்கி வைப்பார்கள் எனவும் அறியப்படுகிறது.

## மணி வாக்கு

கடவுளைத் தேட ஒருவர் யாத்திரை செல்லவோ, தீபம்ஏற்றவோ தூபம்போடவோ, அபிஷேகம் செய்யவோ, அன்றி குங்குமம் பூசவோ தேவையில்லை. அவர் நம் இதயத்துக்குள்ளேயே உள்ளார். நமது உடல் உணர்ச்சியைப் பூரணமாக மறந்தால், அவரை நேருக்கு நேர் காணலாம்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 7 உ (20-3-63)

## யாழ்ப்பாணத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்

யாழ்ப்பாணத்திலே ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளை ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, வண்ணை வைத்தீச்வரவித்தியாலயத்தில் சென்ற வாரம் நடந்த கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் வரவேற்கத்தக்கது. ஏற்கெனவே மேற்குறித்த மிஷனின் ஆதரவில் நடைபெற்றுவந்த வித்தியாலயம், அரசாங்க நிர்வாகத்திற்கு மாறிவிட்டதாலும், விரிந்த முறையில் சமயசமூக சேவைகளை வடமாகாணத்தில் பெரிதும் செய்ய வேண்டியிருப்பதாலும், மிஷன்ன் கிளை ஸ்தாபனத்தை இங்கு ஏற்படுத்த வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது.

உலகிலே பலபல சமயங்களுக்கிடையிலும் போட்டா போட்டிகள் ஏற்பட்டு, சமயவாதம் பெருகி மக்கள் குலத்தைப் பிளவுபடுத்தி வருகையில், சர்வசமய சமரசத்தைப் போதித்து, சமூக சேவையை எவ்வித வேற்றுமையுமின்றிச் செய்யும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் துறவிகள் உலகில் பல நாடுகளிலும் மக்களால் வரவேற்கப்படுகின்றனர். சுவாமி விவேகானந்தர் ஸ்தாபித்த இந்த மிஷன் வரவர வளர்ந்து, உலகமக்களை ஒரேகுடும்பமாக ஒற்றுமைப்படுத்திப் பணியாற்றும் நல்ல கைங்கரியத்தைச் செய்து வருகின்றது. அரசியல், சமூகம், மதம், சாதி முதலிய பெயர்களால் பலபல கட்சிகளும், ஸ்தாபனங்களும் இருந்து சேவை செய்யினும், எவ்வித வேற்றுமையுமின்றி, மக்களுக்கு மேலான தொண்டு செய்து ஆத்மீகத்தின் மூலம் மக்கள் குலத்தை ஒன்றுபடுத்தும் இவ்வித ஸ்தாபனம் இங்கு இன்றியமையாததாகும்.

அமெரிக்காவிலிருந்து திரும்பி வருகையில், சுவாமி விவேகானந்தர், ஈழநாட்டுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து இந்தப்பூமியைப் புனிதப்படுத்தினர்கள். அவரது விஜயத்தின் பயனாகக் கொழும்பிலே ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஏற்பட்டு சமூக, சமய ஒற்றுமைக்காகவும் ஆத்மீகத்துறையிலும் நல்ல பணிகளைப் புரிந்துவந்துள்ளது. பல பல கல்வி ஸ்தாபனங்களைத் தீவின் பல பகுதிகளிலும் நிறுவி நடத்திவந்தது. கல்வி ஸ்தாபனங்களை அரசாங்கமே பொறுப்பேற்று நடத்துவதால், இனி சமூகசேவையில் அதிகம் கவனம் செலுத்தித் தொண்டாற்றலாம். அரசியல், கட்சி, சாதி, சமய வேற்றுமைகளின்றி, மக்கள் குலமனைத்துக்கும் விரிந்த முறையில் தொண்டாற்றக் கூடிய இந்த அகில உலக ஸ்தாபனத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் ஏற்படுவது, இங்கு மன உற்சாகம் குன்றி, நம்பிக்கை இழந்து திகைக்கும் மக்களுக்கு பெரிய வரப்பிரசாதமுமாக இருக்கும்.

இங்கு கிளை ஸ்தாபிப்பதாயின், இதுபற்றி கல்கத்தாவிலுள்ள தலைமைக் காரியாலயமே முடிவு செய்யவேண்டும் என்றும் யாழ்ப்பாணத்து மக்கள் போதிய காரணங்களைக் காட்டி மனுச் செய்தால், தலைமைக் காரியாலயம் இதற்கு இசையக்கூடுமென்றும், சுவாமி பிரேமாத்மானந்தா அவர்கள் கூறியுள்ளார்கள் சுவாமிவிவேகானந்தரை பக்தியுடன் வரவேற்றது யாழ்ப்பாணம். அரசியல், சமயம் முதலிய வேற்றுமைகளால் பிளவுபட்டுத் திகைக்கும் தமிழ் மக்களுக்கு, ஆறுதலும் நம்பிக்கையும் அளித்து, நல்வழிகாட்ட தியாக புத்தியுடன் சேவை செய்ய, இம்மிஷன் இச்சமயம் எவ்வளவு இன்றியமையாததென்பதை விளக்கத் தேவையில்லை. இங்கு கிளை ஏற்பட்டால், அதன் ஆதரவில் இங்கு பல பெரியோர்கள் வந்து, கலாசார, ஆத்மீக சேவைகளையும் செய்ய புதிய வாய்ப்பும் ஏற்படும். விவேகானந்தர் நூற்றாண்டு ஜயந்தி விழாக் கொண்டாடும் இவ்வாண்டிலே இவ்வித கிளை ஸ்தாபனம் இங்கு ஏற்படுவது ஈழத்தமிழகத்தின் எதிர்காலத்துக்கு மிக நன்மை பயக்கும். இந்த முக்கிய கோரிக்கையை கல்கத்தா தலைமைக்காரியாலயம்ஏற்று இதைத் தவக்கமின்றி நிறைவேற்றி வைக்குமென்றே ஆவலுடன் பலரும் எதிர்பார்க்கின்றனர். சுயநலமற்ற தியாகிகளான வீரத் துறவிகளின் சேவை இன்று இந்நாட்டுக்கு மிக்க அவசிய தேவையாகும்.

## தொழிலாளர் அரசாங்கம்

### என். எம். நம்பிக்கை

ஹன்வெல, செவ்வாய்

இடதுசாரிக் கட்சிகளிடையே வேற்றுமை இல்லாததினல் தொழிலாளர் அரசாங்கம் அமைப்பதில் இதுவரை தாமதம் ஏற்பட்டு வருகிறது. இடதுசாரிக் கட்சிகளுக்கிடையில் இப்பொழுது ஐக்கியம் ஏற்படக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர் அரசாங்கம் அமைதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன" என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும் எட்டியாந்தோட்டை எம். பி.யுமான டாக்டர் என். எம். பெரேரா கடுகவலையில் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் ஹேவகமைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இப்பொழுது பிளவுபட்டுள்ள இடதுசாரிக் கட்சிகள் ஐக்கியப்பட்டால் பலம் பொருந்திய எதிர்க் கட்சி அமைக்கலாமென்றும் பிற்போக்குவாதிகளை ஒழித்துக் கட்டலாமென்றும் டாக்டர் என். எம். பெரேரா மேலும் கூறினர்.

இடதுசாரிகளுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுத்த திரு. பிலிப் குணவர்த்தன முன்வந்துள்ளாரென்றும் இது உண்மையிலேயே நல்ல அறிகுறியென்றும் டாக்டர் என். எம். பெரேரா கூறினர்.

# கல்வி டைரக்டரின் முடிவு ஒழுங்கற்றது

## அட்டோர்னி ஜெனரல் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க சேவையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்களை, மீண்டும் வித்தியாதிபதியின் தலைமையின் கீழ் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமித்து முன்னைய சேவையுடன் சேர்த்து கணித்து சம்பளம் வழங்குவதென கல்வி டைரக்டர் செய்துகொண்ட முடிவு ஒழுங்கற்ற செயல் என அட்டோர்ணி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்கள் ஆசிரியத் தொழிலுக்கு தகுதியுடையவர்களாய் இருந்ததால் அவர்களை ஆசிரியர்களாக நியமனம் செய்வதென்றும், முன்னைய சேவைகாலத்துடன் சேர்த்து கணித்தே அவர்களுக்கு சம்பளம் வழங்குவதென்றும் கல்வி டைரக்டர் முடிவு செய்திருந்தார். அத்துடன் அந்த அடிப்படையில் பல ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டார்கள். திறைசேரியின் அங்கீகாரத்துடனேயே இந்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். இதை அறிந்த ஆடிட்டர் ஜெனரல் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கமர்த்துவது, அவர்களின் முன்னைய சேவையை கணித்துக் கொள்வது ஆகியவை பற்றிச் சட்டம் திருத்தப் படும் வரையில் கல்வி டைரக்டர் அப்படிச் செய்ய முடியாதென அறிவித்திருந்தார். ஆனல் கல்வி டைரக்டர் அதைமறுத்து தனக்கு அப்படிச் செய்ய அதிகாரம் இருப்பதாகவும் சம்பளத்தை நிர்ணயிப்பதற்காக சட்டத்தை திருத்தவேண்டிய அவசியமில்லையென்றும் ஆடிட்டர் ஜெனரலுக்குத் தெரிவித்திருந்தார்.

ஆடிட்டர் ஜெனரல் இதை அட்டோர்ணி ஜெனரலுக்கு தெரியப்படுத்தியிருந்தார். இதைத் தொடர்ந்தே கல்வி டைரக்டரின் இவ்வித முடிவு ஒழுங்கற்றதென அட்டோர்ணி ஜெனரல் தெரிவித்துள்ளார். சட்டத்தை திருத்தம் செய்யாமல் இவ்விதம் முடிவு செய்ய முடியாதெனவும் அது ஒழுங்கற்றதெனவும் அட்டோர்ணி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

# வட்டுக்கோட்டைக்கு மகளிர் மகாவித்தியாலயம்

## கிராமசபை கோரிக்கை

வட்டுக்கோட்டை, செவ்வாய்

வட்டுக்கோட்டை கிராம சபையின் சென்ற கூட்டம் அதன் தலைவர் திரு. செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"வட்டுக்கோட்டைக் கோவில் பற்றில் ஒரு மகளிர் பாடசாலை இல்லாமை பெருங் குறையாய் இருப்பதால், இவ் வட்டாரத்தில் ஏறக்குவறய மத்திய ஸ்தானத்தில் இருக்கும் சுப்பிரமணிய வித்தியாசாலையை மகளிர் மகா வித்தியாலயமாக மாற்றி அமைத்துக் குறித்த குறையை உடனடி நடவடிக்கைகள் மூலம் தீர்த்து வைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று இச்சபை ஏகமனதாகத் தீர்மானிக்கின்றது".

இந்நாட்டில் வதியும் பெருந்தொகையான சைவ மக்கள் சார்பில் யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் நடாத்தி வந்த சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையை அரசாங்கம் மூடியது சைவ சமூகத்திற்கு இழைக்கப்பட்ட ஒரு பெரிய அநீதியாக முடியுமாகையால் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையை உடனே மீண்டும் திறந்து நடத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் மற்ருேர் தீர்மானமும் நிறைவேறியது.

## முட்டை விற்பனை பற்றி மகாநாடு

### உபசபாநாயகர் கூட்டினர்

வென்னப்புவ, செவ்வாய்

விற்பனை இலாகா நடுத்தர மனிதன் போல செயலாற்றி வருவதாலேயே முட்டையின் விலை குறைந்துள்ளதாக திரு. ஐ. ஹியு பெர்னண்டோ கோழிப் பண்ணையாளர் மகாநாடொன்றில் தெரிவித்தார். கோழிப் பண்ணைச் சங்கத்தார் செய்துகொண்ட புகார்களின் பெயரில் வென்னப்புவ எம். பி.யும் ஜனப்பிரதிநிதிகள் சபையின் உபசபாநாயகருமாகிய திரு. ஹியு பெர்னண்டோ இம் மகாநாட்டை கூட்டியிருந்தார். மகாநாட்டில் விற்பனை இலாகா கூட்டுறவு இலாகா, கோழிப் பண்ணையாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம்மகாநாட்டில்பேசிய திரு. ஐ. எச் பெர்னண்டோ, விற்பனை இலாகாவால் திறம்பட இயங்க முடியாவிட்டால் அதை மூடி கூட்டுறவு இலாகாவிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விடுவது நல்லது எனவும் தெரிவித்துள்ளார். விற்பனை இலாகா உற்பத்தியாளருக்கும் பொருளை வாங்குவோருக்கும் நன்மை செய்யவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## விசர்நாய் தொல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் விசர்நாய் தொல்லை அதிகரித்துவருவதைக் கட்டுப்படுத்துவதற்கு மாநகரசபை இப்பொழுது தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பொழுது தினசரி 17, 18 நாய்கள் பிடிக்கப்படுகின்றன

## ஐயாறன் எழுதுவது

இளம்வீரர் ஆனந்தன் இன்று மாலை வல்வெட்டித் துறையிலிருந்து பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கத் துணிச்சலுடன் புறப்படுகிருர். ஈழத்துப் பொதுமக்கள் சார்பாக அந்த இளம்சிங்கத்துக்கு நல்வாழ்த்துக் கூறுகிருேம்.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன் வீரர் நவரத்தினசாமி, இந்தச் சாதனையை முதல்முதலாக வெற்றிகரமாக நிறைவேற்றி, பெரும் புகழ்பெற்ருர். அதன் பிறகு இவ்வித முயற்சி செய்வது இந்த 'இளஞ்சிங்கம்'தான். வெற்றி தோல்வி எப்படியாயினும் சரி. ஆபத்துக்கள் நிறைந்த இந்தப் பெரும் காரியத்தைச் செய்ய துணிச்சலுடன் முன்வந்ததே போற்றத்தக்கதாகும். திருவருளும், பொதுமக்களின் வாழ்த்துக்களும் துணைநிற்க, அவரது இந்த முயற்சி வெற்றி பெறுமென்றே நம்புவோம்.

* * *

ஒருவர் நீந்திச் சென்றுவிடக்கூடிய இந்த "வாய்க்கால்"தான் இருநாடுகளையும் பிரித்துள்ளது. சில வருடங்களுக்குமுன் இந்தவழியாக இருநாடுகளுக்கும் பல்லாயிரக் கணக்கான படகுப் போக்குவரத்துகள் நடந்தனவாம். இந்தியாரங்கூன், முதலிய இடங்களிலிருந்து அரிசி கொண்டுவரும் பாய்மரக் கப்பல்கள் ஆயிரக் கணக்கில் காங்கேசன்துறை, பருத்தித்துறை முதலிய துறைமுகங்களில் நிற்பதைத் தாம் பார்த்திருப்பதாக ஓர் அன்பர் தெரிவிக்கிருர். கடலில் துணிந்து சென்று நமக்கு வேண்டிய உணவு முதலிய பொருள்களைக் கொண்டு சேர்த்த வீரர்கள் பரம்பரை இன்றும் இங்கு இருக்கவே செய்கின்றது. நவரத்தினசாமி, ஆனந்தன் இவர்களெல்லாம் இதற்கு நல்ல அத்தாட்சி.

* *

சில தப்பெண்ணம் காரணமாக இருநாடுகளுக்கும் இப்போது போக்குவரத்து செய்வதைக் கடும் சட்டங்களால் தடுத்திருக்கிருர்கள். சந்திரமண்டலத்துக்கு மனிதன் சென்று குடியேற முயலும் இக்காலத்திலே, அண்டை நாடுகளுக்கிடையிலும் மக்கள் தாராளமாகப் போக்குவரத்து செய்ய முடியாதபடி இன்றைய தர்பார் தடுக்கின்றது. இந்தத்தடை இயற்கைக்கும் மனிதனின் அடிப்படை உரிமைக்கும் மாருனதாகும்.

இவ்வித நிலையில் தனிப்பட்ட ஒரு வாலிபர் நீந்தி அக்கரைசென்றுதிரும்ப, அனுமதி கிடைத்ததைக்காண வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. எந்தக் காரணங்களால் இன்றைய தடைகள் போடப்பட்டிருப்பினும் சரி இக்காரணங்கள் சீக்கிரம் நீங்கி, உலகெங்கும் மனிதன் எங்கு வேண்டுமாயினும் சுதந்திரமாகச் செல்லக் கூடிய நிலை ஏற்பட திருவருள் துணை செய்யவேண்டும்.

* * *

முன்னுள் பள்ளிக்கூட அதிபர் ஒருவருக்கு குடிப் பழக்கம் உண்டாம். குடிவெறியாயிருக்கையில் அவர் சுயபுத்தியை இழந்து கூடாத முறையில் நடப்பதுண்டென்றும் ஓரன்பர் வந்து சில கதைகளை கூறினர் .அதையெல்லாம்கேட்கவே வெட்கமாகவும் மன வேதனையாகவுமிருந்தது.

யாழ்ப்பாணத்திலே தவறனை முறைமாறி மரவரிமுறை வந்த பின். பெண்கள், மாணவர் இவர்களிடையிலும் கூடகுடிப்பழக்கம் அதிகரித்து, அது பெரிய சாபத்தீடாகி விட்டதாக மற்ருேர் அன்பர் வந்து சொல்லி வருந்தினர்.

மதுபானம் அருந்துவதைப் பாவமென்று கூறமாட்டேன். ஆனல் அது ஒருவிதத்தில் "தற்கொலை"யாகும். நம் சுய அறிவையும் சுயமதிப்பையும் இழந்துவிட்டால் பிறகு நம்

(8-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ்விசாரணை

# மல்லாகம் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

## சாட்சியங்கள் சரியில்லாததால் விசாரணை நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் மல்லாகம் கொலைவழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சிகளை தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார். சாட்சியங்கள் திருப்தியில்லையென்றும் விசாரணையைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லையென்றும் ஜூரிமார் தெரிவித்தனர்.

ஜூரிகளின் அபிப்பிராயத்தை ஏற்று நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இந்த வழக்கு சுப்ரீம்கோர்ட்டுககுப் பாரப்படுத்தப்படாமலிருந்திருக்கலாம் என்று நீதியரசர் தெரிவித்தார்.

தீர்ப்பளிக்குமுன் நீதியரசர் சாட்சிகளைப்பார்த்து, "இங்கு நீங்கள் அளித்த சாட்சியங்களும், பொலிஸார் அளித்த சாட்சியங்களும், கீழ்க்கோர்ட்டில் அளித்த சாட்சியங்களும் எதிரிகளைக்குற்றவாளிகளாகக் காண முடியவில்லை" என்று கூறினர்.

கீழ்க்கோர்ட்டில்நீதிபதி தன் யோசனையைப் பாவித்து இந்த வழக்கைச் சுப்ரீம் கோட்டிற்குப் பாரப்படுத்தாமலிருந்திருக்கலாம். அப்படியான தொரு வழக்குத்தான் இது. சுப்ரீம்கோர்ட்டிற்குப்பாரப்படுத்த தகுதியற்ற அதிசமான வழக்குகள் சுப்ரீம்கோர்ட்டிற்குப்பாரப்பத்தப் படுகின்றன. என்று நீதியரசர் மேலும் கூறினர்.

1961-ம் ஆண்டு, ஆவணி மாதம் 12-ம் திகதி மல்லாகம் சந்திக்கருகே சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் தம்பிப்பிள்ளை கந்தையாவைக்கொலை செய்ததாகவும், தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தைக் கத்தியால் வெட்டிப் படுகாய முண்டுபண்ணியதாகவும், தம்பிப்பிள்ளை நடராசவிற்குக்காயம் விளைவித்ததாகவும், சின்னச்குட்டி சின்னவனுக்குக்காயம் விளைவித்ததாகவும், தம்பிப்பிள்ளை கனகரத்தினத்திற்குச் சொந்தமான காரைச் சேதப்படுத்தியதாகவும் குற்றஞ் சாட்டி ஏழாலையைச் சேர்ந்த இராமலிங்கம் கனகரத்தினம், துரையப்பா ஞானசேகரம்,செல்லையா இராசதுரை, இராமலிங்கம் சிவஞானம், செல்லையா இரத்தினம் ஆகியோர் மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதில் குற்றம் சாட்டப்பட்ட ஆரும் எதிரியான துரையப்பா ரிமாண்டில் இருக்கும் போது காலமாகிவிட்டார்.

எதிரிகளின் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திருவாளர்கள் டி. கணேசலிங்கம், ஆர். ஆர். நல்லையா, எம். எம. சுந்தரலிங்கம் ஆகியோரின் உதவியுடன் திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, ரி. தம்பிரத்தினம் ஆகியோரின் அனுசாரணையுடன் ஆஜராஞர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் திரு. பி. நடராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

தம்பிப்பிள்ளை நடராசா சாட்சியமளித்த போது கூறியதாவது:

சம்பவம் நடந்தன்று மல்லாகத்திலிருந்தேன். காலை ஏழு மணிக்கு வட்டுக்கோட்டைக்குப் போனேன். மல்லாகம் கராஜில் சகோதரனைச்சந்தித்தேன். 3 மணிக்கு மல்லாகம் வந்தேன். சந்திக்கு வந்த போது தூரத்தில் சனக்கூட்டத்தைக் கண்டேன். காரை கராஜில் நிற்பூட்டினேன் கந்தையாவை முதலாம் எதிரியும் நான்காம் எதிரியும் தாக்கினர்கள். கடைக்குமுன்னல் உள்ள விளக்குக் கம்பத்தின் கீழ் கந்தையாவைத்தாக்கினர்கள். இதைக் கேட்டதும் நான் இறங்கிச்சென்றேன். அப்பொழுது வெடிச் சத்தம் கேட்டது. சிவபாத சுந்தரம் விழுந்துகிடக்கக் கண்டேன். கனகரத்தினத்தை இரண்டாம் மூன்றும் எதிரிகள் இரும்புக் கம்பியால் அடித்தார்கள். முதலாம், நான்காம் எதிரிகளை "ஏன் கனகரத்தினத்திற்கு அடிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். நான்காம் எதிரி கம்பியால் என் முதுகில் அடித்தார்.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி: உமது வாக்குமூலத்தை இன்ஸ்பெக்டர் தமிழில் விளங்கப்படுத்தினரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: சரியென்று ஏற்றுக் கொண்டீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: கூட்டத்தைக் கண்டீரா?

சாட்சி: ஆம்

ஜி. ஜி: எங்கே?

சாட்சி: என் தமையனின் கராஜ் முன்பு.

ஜி. ஜி: கூட்டத்தின் மத்தியில் என்ன நடந்ததென்று தெரியாது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: தூரத்தில் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. வெடிச் சத்தம் கேட்டபோது உங்களுக்கு உமது சகோதரர்களுக்கு ஏதும் நடந்திருக்குமென நினைக்கவில்லையா?

சாட்சி: நினைக்கவில்லை.

ஜி. ஜி: கந்தையா எவ்விடத்தில் அடிபட்டார்?

சாட்சி: விளக்குக் கம்பத்தின் பக்கத்தில்.

ஜி. ஜி: கந்தையாவின் உடலில் இரத்தமிருந்ததா?

சாட்சி: ஆம். தலையிலும் உடம்பிலும்.

ஜி. ஜி: பொலிசாருக்கு கந்தையா அடிபட்ட இடத்தைக் காட்டினீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: கனகரத்தினத்தை வெளியில் காணவில்லை?

சாட்சி: காணவில்லை.

ஜி. ஜி: மணியம்கடை தெரியுமா?

சாட்சி: தெரியும்.

ஜி. ஜி: மணியம் கடைக்கு முனனல் கனகரத்தினத்திற்கு அடிவிழுந்ததைக் கண்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: வாக்குமூலத்தில் எப்பொழுதாவது மணியம் கடைக்கு முன்னல் கனகரத்தினத்திற்கு அடிவிழுந்ததாகச் சொன்வீரா?

சாட்சி: இல்லை,

ஜி. ஜி: 13-ம் திகதி காலை 10 மணிக்கு மல்லாகம் நீதவான் விசாரணைக்கு வந்தார்?

சாட்சி ஆம்.

ஜி. ஜி: நீர் மட்டும் சாட்சியமளித்தீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: அப்பொழுது வாக்குமூலத்தில் கனகரத்தினம் மணியத்தின் கடைக்கு முன்னல் நின்றவர் என்றீர்?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: மணியம் கடை திறந்திருந்ததாகச் சொன்னீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: மணியம் கடையில் இருந்ததென்றீர்?

சாட்சி: சொல்லவில்லை.

ஜி. ஜி: வாக்குமூலத்தில் கனகரத்தினத்திற்கு அடி. விழுந்ததும் கராஜுக்குள் ஓடினர் என்றீர்?

சாட்சி: இல்லை.

ஜி ஜி: கனகரத்தினத்தை யாராவது வெளியிலிருந்து துரத்தினர்களா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: வாக்குமூலத்தில் கனகரத்தினத்தை சிவஞானமும் ராசதுரையின் தம்பியும் துரத்தினர்கள் என்றீர்?

சாட்சி: இல்லை

ஜி. ஜி: கனகரத்தினத்திற்கு இரும்புக் கம்பியால் அடித்ததாகச் சொன்னீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: வேறு ஆயுதங்கள் பாவிக்கப்படவில்லையா?

சாட்சி: நான் காணவில்லை.

ஜி. ஜி: கதிரையால் யாருக்காவது அடித்தார்களா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: யாருக்கு?

சாட்சி: கனகரத்தினத்திற்கு தலையில் கதிரையால் அடித்தார்கள்.

ஜி. ஜி: சிவஞானம் என்பவரைத்தெரியுமா?

சாட்சி: ஆம் தெரியும்.

ஜி. ஜி: நீதவானுக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் சிவஞானம் கதரையால் கனகரத்தினத்திற்கு அடித்தார் என்றீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: அப்படிப் பதியப்பட்டிருந்தால் அது பொய்?

சாட்சி: ஆம். பொய்.

ஜி. ஜி: வாக்குமூலத்தில் சிவஞானம் கையில் இரும்புக் கம்பியைக் காணவில்லை என்றீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. பொலிசுக்குக் கொடுத்த வாக்குமூலத்தில், முதலாம் எதிரியின் தம்பி கதிரையால் கனகரத்தினத்தை அடித்தார் என்றீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: அப்படி எழுதப்பட்டிருந்தால் அது பொய்?

சாட்சி: ஆம் பொய்.

ஜி. ஜி: கனகரத்தினத்தை யார் யார் அடித்தது?

சாட்சி: இரண்டாம் மூன்றும் எதிரிகள்.

ஜி. ஜி: நேற்று சாட்சியத்தின்போது முதலாம் நான்காம் எதிரிகள் அடித்ததாகச் சொன்னீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஏன் அப்படிச்சொன்னீர்.

சாட்சி மயக்கமாயிருந்தபடியால் மாறிச் சொன்னேன்.

ஜி. ஜி: இன்று காலை சாட்சிக கூண்டில் ஏறும்போதும் மசக்கமாயிருந்தீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இன்று காலையும் முதலாம், நான்காம் எதிரிகள் கனகரத்தினத்தை அடித்ததாகக்கூறினீர்.

சாட்சி: அதுவும் மயக்கத்தில் சொன்னேன்.

நீதியரசர்: மயக்கமென்றுல், எப்படி மயக்கத்தில் சொன்ன பதில் ஞாபகமிருக்கும்.

சாட்சி: சிலநேரம் மயக்கம் வரும்.

நீதியரசர்: மயக்கமான நேரத்தில் சொன்னது எப்படி ஞாபகமிருக்கிறது? அல்லது இப்பொழுது வீர் உண்மை பேசவில்லையா?

சாட்சி: சில நேரம் மயக்கமாயிருக்கு.

ஜி. ஜி: இரத்தினம் சயிக்கிள் கடைக்கு முன்னல் கந்தையாவுக்கு அடிவிழுந்ததைக் கண்டீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: அடிபட்ட இடத்தி[illegible] விழுந்தாரா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: கந்தையா ஓடியதைக் கண்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: நீதவானுக்கு அளித்த வாக்குமூலத்தில் கந்தையா கராஜுக்கு ஓடிப்போனதாகச் சொன்னீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: கராஜ் வாசலில் விழுந்தார் என்றீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி; எதனல் விழுந்தார்?

சாட்சி: முதலாம், நான்காம் எதிரிகள் அடித்தபோது.

ஜி. ஜி: சிவபாதசுந்தரம் விழுந்திருந்ததைக் கண்டீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: எங்கே?

சாடசி. கந்தையாவின் பக்கத்தில்!

ஜி: ஜி: சிவபாதசுந்தரம் கொல்லப்பட்டார் என்று சந்தேகப்பட்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: அவருக்கு என்ன நடந்ததென்று தெரியுமா?

சாட்சி: தெரியாது.

ஜி ஜி: வாச்குமூலத்தில், இறந்தவராகிய சிவபாதசுந்தரத்தை காணவில்லை என்றீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. அப்படி பதியப்பட்டிருந்தால் அது பொய்?

சாட்சி: ஆம் பொய்.

ஜி. ஜி: 31-10-61ல் சாட்சியம் சொல்லும்போது சிவபாதசுந்தரம் கொலை செய்யப்பட்டார் என்று எனக்குத் தெரியாது என்றீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: ஐந்தாம் எதிரியைக் கண்டீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: சாட்சியத்தின்போது ஐந்தாவது எதிரியைக் காணவில்லையென்றீரா?

சாட்சி: இல்லை!

ஜி. ஜி: யாரின் கையிலாவது சின்னபபிடியுள்ள கோடரியைக் கண்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: வளைந்த கத்தியை யாரின் கையிலாவது கண்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: யாரிடமாவது துப்பாக்கியைக் கண்டீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: சம்பவம் நடந்தபின் கந்தையாவைக் கொண்டு போன காரின் பின்னல் உமது காரில் போனீர்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஏன் சிவலிங்கப்பிள்ளையார் கோவிலடியில் காரை நிறுத்தினீர்?

சாட்சி: மயக்கம் வந்ததால், காரை நிறுத்திவிட்டு ஆஸ்பத்திரிக்கு நடந்து சென்றேன்.

ஜி. ஜி: இதற்குமுன் கோர்ட்டிற்குப் போயிருக்கிறீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: உடன் அளிக்கும் சாட்சியம் உதவியாயிருக்கும் என்று தெரியுமா?

சாட்சி: தெரியாது.

நீதியரசர்: இதற்குமுன் கோர்ட்டிற்கு போனீரா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: எங்கே, எதற்காகப் போனீர்? வழக்குப் பார்க்கவா?

சாட்சி: மல்லாகத்தில்- பஸ்ஸில் 'ஓவர்லோட்' வழக்குக்கு.

ஜி. ஜி: சிவபாதசுந்தரத்தின் வழக்கிற்கு முன் நீர் கோர்ட்டிற்குப் போயிருக்கிறீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: பொலிசுக்குப் போயிருக்கிறீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: கணபதி கொலை வழக்கில் 6 மாதம் ரிமாண்டில் இருந்தீரல்லவா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: அது எப்ப நடந்தது?

சாட்சி: தெரியாது.

ஜி. ஜி: 1954-ல் அல்லது 55-ல் நடந்தல்லவா?

சாட்சி: ஞாபகமில்லை.

ஜி. ஜி: அதில் இறந்தவராகிய கந்தையாவும் நீரும் எதிரிகளல்லவா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. அடித்துக்கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டதல்லவா?

சாட்சி: ஆம்.

ஜி ஜி: சம்பவம் நடந்தன்று மூன்று சகோதரர்களும் ஆயத்தமாக இருந்தீர்கள்?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: கனகரத்தினம் வேட்டைக்குப் போகிறவரா?

சாட்சி: இல்லை

நீதியரசர்: துப்பாக்கிபாவிக்கிறவரா?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: நீர் எப்போதாவது துப்பாக்கி பாவித்தீரா?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: உமது சகோதரர் இறந்தபின் அவரின் சடலத்தைப் பார்க்க தெண்டிக்கவில்லையா?

சாட்சி: நான் மூத்த சகோதரிக்கு அறிவிக்கப்போனேன்

நீதியரசர்: சகோதரன் இறந்தது மற்றவர்கள் சொல்லித்தான் அறிந்தீர்?

சாட்சி: ஆம்.

சின்னட்டி சின்னவன் சாட்சியமளித்போது கூறியதாவது:

ஐந்து எதிரிகளையும் எனக்குத்தெரியும். இரண்டாம் எதிரியின் பெயர் தெரியாது. 3 மணிக்கு இரத்தினம் சயிக்கிள் கடையில் என் சயிக்கிள் திருத்தப் போனேன். இரத்தினம் கடைக்குள் இருந்தார். நான் விருந்தையில் இருந்தேன். கனகரத்தினம் கார் கொண்டு வந்து கராஜில் விட்டார். காருக்கு அடித்த சத்தம் கேட்டதும் நான் பார்த்தேன். கனகரத்தினம் காரிலிருந்து இறங்கும் போது முதலாம் எதிரி அலவாங்கால் அடித்தார். பின் மற்றவர்கள் அடித்தார்கள். கனகரத்தினம் காருக்குப் பின்னல் ஓடினர். பின்பு அவருக்கு கம்பியால் அடித்தார்கள். இந்த எதிரிகளைத் தவிர வேறு ஆரும் அவருக்கு அடிக்கவில்லை. நான் சயிக்கிள் கடையில் இருக்கும் போது வெடிச்சத்தம் கேட்டதும், கந்தையா 'ஐயோ' என்று கத்தினர். முதலாம் எதிரி கந்தையாவை அலவாங்கால் அடித்தார்.

இரண்டாம் எதிரி கோடரியால்கந்தையாவைக் கொத்தினர். பின் எல்லோரும் கம்பியால் கந்தையாவை அடித்தார்கள். நான் சயிக்கிளை எடுத்துப் போனபோது ஐந்தாவது எதிரி எங்கே போகிருய் என்று கம்பியால் ஒரு முறை அடித்தார். கந்தையாவை அடிக்கும்போது நடராசா காரில் வந்தார். கனகரத்தினத்திற்கு எதிரிகள் அடித்தலை நடராசா பார்த்திருக்க முடியாது. நான் தபால் கந்தோருக்குப் போய் தியாகராசாவிடம், 'ஏழாலையாரும் மல்லாகத்தாரும்' சண்டை பிடிக்கிருர்கள் என்று பொலிசுக்கு அறிவிக்கச் சொன்னேன். எதிரிகளின் பெயர் சொல்லவில்லை. அன்றிரவு பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்தேன். அடுத்தநாள் நீதிபதிக்கு வாக்குமூலம்கொடுத்தபோதுமயக்கமாயிருந்தபடியால் ஞாபகமில்லை.

நீதியரசர்: மல்லாகத்து ஆட்களுக்கு இப்படி மயக்கம் வருவது வழககமா?

சாட்சி: இல்லை.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி: எதிரிகள் என்னென்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள்.

சாட்சி: முதலாம் எதிரி அலவாங்கு, இரண்டாம் எதிரி இரும்புக்கம்பி, பின்பு கோடரி, மூன்றும் எதிரி இரும்புக்கம்பி, நான்காம் எதிரி இரும்புக்கம்பி, பிறகு துவக்கு, 'சோங்கு', ஐந்தாம்எதிரி இரும்புக்கம்பி, ஆருவது எதிரி முதலில் ஒன்றும் வைத்திருக்கவில்லை. பிறகு கல்லு வைத்திருந்தனர்.

ஜி. ஜி: முதன் முதல் பார்த்தபோது கந்தையா நின்ருரா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: இவ்வளவும் நீர் நீதவானின் வாக்கு மூலத்தில் சொல்லியிருக்கிறீரா?

சாட்சி: சொல்லியிருக்கக் கூடும்.

ஜி. ஜி: போஸ்ட்மாஸ்டருக்கு எதிரிகளின் பெயர் சொன்னீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: ஆஸபத்திரியில் பொலிசுக்கு வாக்கு மூலம் கொடுத்தீரா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: தமிழில் விளங்கப்படுத்தினரா?

சாட்சி: விளக்கப்படுத்தவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)



# மங்கையர் உலகம்

## பெண் கல்வியின் குறிக்கோள்

—மலர்—

**பட்டங்கள் பெறுவதற்காக மட்டுமே கல்விகற்க வேண்டும்என்ற நோக்கம் பெண்களிடமிருந்து அகற்றப்படவேண்டும். கல்விஒரு பெண்ணை நல்ல பெண்மணியாக்க உதவவேண்டும். இதுவே கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.**

பெண்கள் கற்கவேண்டியது அவசியமா? ஆம். தனது வாழ் நாள் முழுவதும் பிறருக்குச் சேவை செய்யும் ஒரு பெண் கற்றவளாகவே இருக்கவேண்டும். ஆனால் பெண்கள் கற்கும் கல்வி எத்தகையதாக இருக்கவேண்டும், என்ன நோக்குடன் கற்கப்பட வேண்டுமென்பதே ஆராயப்பட வேண்டியதொன்று

கல்வி ஞானமோ, கேள்வி ஞானமோ ஆண், பெண் இருவருக்கும் அவசியமானது. ஆனால் அதைக் கற்கும் விதமே வேறுபடுகின்றது. ஆண் கற்கும் கல்வி அவனை அண்டியோரை வாழவைப்பதற்காகவே இருக்கும், ஆனால் பெண் கற்கும் கல்வி நாட்டையே, உலகத்தையே வாழவைப்பதாக இருக்கும்; இருக்கவேண்டும். ஒரு பெண்ணின் கல்வி அவளை அறத்தின் வழியில் நடப்பிப்பதற்காக இருக்க வேண்டுமேயல்லாமல், அகங்காரம் என்னும் குழியில் விழுத்துவதற்காக இருக்கக் கூடாது.

கற்றதின்படி வாழ முடியாவிட்டால் கற்காமல் இருப்பதே மேல்.

அக்காலத்தில் அரசிளங் குமரியிலிருந்து குடிகள் வரை கல்வியறிவில் சிறந்து விளங்கினர். பெண்கள் கல்வி கேள்வி ஞானத்தில் பெரும் அறிஞர்களுடன், ஞானிகளுடன் வாதம் செய்து வெற்றி பெற்றதை நாம் நூல்கள் வாயிலாக அறிகிறோம்.

தாய்மார்கள் தங்களின் பெண் குழந்தைகள் நடனம், சங்கீதம் இப்படியான பல கலைகளிலும் வல்லவர்களாக விளங்கவேண்டும் என விரும்பினால் மட்டும் போதாது ஆனால் ஒவ்வொரு தாயாரும் தனது குழந்தை கல்வியறிவில் சிறந்து விளங்கவேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும். கல்வியறிவு, பட்டங்கள் பெறுவதற்காக மட்டும் அல்ல. ஒரு பெண்ணின் எதிர்காலத்தையே பிரகாசிக்கக்கூடியதாக இருக்கின்றது கல்வி அறிவு.

கல்வி கற்ற பெண்ணிடம் பணிவு இருக்க வேண்டும். பெண்ணுக்கு வேண்டிய அடக்கம், பணிவு ஆகியவை கல்வியிலிருந்து கிடைக்காவிட்டால் கல்விகற்றும் பயனில்லை என்றுதான் கூறவேண்டும். நிறைகுடம் தளம்புவதில்லை. கற்ற பெண்களும் இதேபோன்று உறுதி குலைவதில்லை. அவர்கள் கற்ற கல்வி அவர்களை உறுதியாக்குகின்றது. கற்ற பெண் அடங்குகின்றாள், அவளது பெருமை உயர்கிறது பெண்ணின் பெருமை இதில் தான் வெளிப்படுகிறது.

தனது கல்வியைத் திறம்பட செய்வதற்கும் தனது இலட்சியத்திற்கு தடையாக இருப்பவர்களை விலக்கவும் பெண்ணுக்கு அவளது அறிவு உதவியாக இருக்கிறது.

### கல்வியினால் நடத்தப்படும் இல்லறம்

குடும்பத் தலைவன் கல்லாதவனாக இருந்தாலும் தலைவி அவசியம் கற்றவளாக இருக்க வேண்டும். நிரம்ப கற்றவள் இறுமாப்பினால் அடங்காப் பிடாரியாக வாழ்க்கை நடத்த முன்வரமாட்டாள். இல்லறத்தின் உண்மையான சிறப்பை உணர்ந்து வாழ அவளது கல்வி உதவும். அடுப்பங்கரை அடிமையாக இருக்காமல் அரசியாகவும் இருப்பாள்.

சந்தேகத்தில் தனது குழந்தைகளை வாழவிடாமல் உடனுக்குடன் அவர்களின் சந்தேகங்களை விலக்கியும்விடுவாள். தாயார் காட்டும் பாதையில் குழந்தைகளும் வளரும்.

அமைதியுடன் இல்லறம் நடத்துவதற்கு தெளிந்த ஆழமான அறிவு நன்கு உதவும் என்பது உண்மை.

## "கிராம சேவகர் பயிற்சிக்கு உதவி செய்க"

### அரசாங்க அதிபர்களுக்கு மந்திரி கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

கிராம சேவகர் பயிற்சியில் அதிக அக்கறை காட்டுமாறு அரசாங்க அதிபர்களை உள்நாட்டு கைத்தொழில், கலாசார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கேட்டுக் கொண்டார்.

கிராம சேவகர்கள் தங்களுடைய கடமைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஆரம்ப காலத்தில் காரியாதிகாரிகள் அதிக நேரம் செலவிட்டுப் பயிற்சியளிப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அரசாங்க அதிபர்களை திரு. மைத்திரிபாலசேனநாயக்கா கேட்டுக் கொண்டார்.

அரசாங்க அதிபர்களின் மகாநாடு நேற்று புல்லர்ஸ் வீதியிலுள்ள கல்லோயா அபிவிருத்திச் சபைக் காரியாலயக் கட்டிடத்தில் ஆரம்பமானது. இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்து, திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசினார்.

"இந்தப் புதிய சேவையை மக்களும் அரசாங்கமும் பெரிதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். கிராம விதானை சேவையில் அதிருப்தி ஏற்பட்டதுபோல் இல்லாமல் கட்டுப்பாடான, ஒழுங்கான, விசுவாசமுள்ள, திறமையான சேவையாக இப்புதிய சேவையைஉருவாக்கவேண்டியது எங்கள் எல்லோரதும் பொறுப்பாகும்" என்று திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூறினார்.

## ஆசையை வென்ற பெண்

—வாசுகி—

'பிறந்தாலும் பெண்ணாகப் பிறக்கப்படாது' என வெதும்பியவளாக இந்து கிணற்றடிக்குச் சென்று கொண்டிருந்தாள். அவள் கைகளில் துவைப்பதற்காக ஒரு மூடை துணிக் குவியல்கள். இந்துவின் மனம், பெண்ணாகப் பிறந்ததினால் தான் அடைந்த பயன்தான் என்ன; வாழ் நாள் முழுவதும் ஒரு இயந்திரமாக இருந்து கடமைகளைச் செய்வதா எனது வாழ்க்கை என அலுத்துக்கொண்டது.

அவளது மனதில் எதிர் வீட்டு மங்களம் தோன்றி தனது வைர அட்டிகைகளைக் காட்டி மகிழ்வது தெரிந்தது. அப்படியே அடுத்த வீட்டு விசாலத்தின் அரக்குப்பட்டுச் சேலையும், மஞ்சுவின் முத்துப்பதித்த வளையல்களும் தோன்றித் தோன்றி மறைந்தது. திருமணம் செய்ததினால் என்ன பயனைதான் அடைந்தாள் என எண்ணியது இந்துவின் உள்ளம். அவளது உள்ளத்தில் ஆத்திரத்தின் வேகம் அவளையும் அறியாமல் துவைக்க வந்த முழுத் துணியையும் துவைக்க வைத்துவிட்டது.

ஆனால் திரும்பவும் அவள் உள்ளத்தில அவ்வாசைத் தீ எழுந்தது. எப்படியாவது மஞ்சுவின் முத்துப் பதித்த வளையலைப்போல் வாங்கிவிடவேண்டும் என எண்ணியது. பொறுமை பொறுமை எனத் தான் அடங்கிக் கிடப்பதால் தான் அனுபவிக்கவேண்டிய ஒன்றையும் அனுபவிக்க முடியாமல் போயிற்று என நினைத்தாள். இன்று மாலை கணவன் வீடு திரும்பியதும் எப்படியாவது தனது ஆசைகளை நிறைவேற்றுவதாக முடிவு பண்ணினாள். அத்துடன் தான் பெருமையாக மஞ்சுவுக்கு சரளாவின் திருமணத்துக்கு முத்து வளையல்கள் அணிந்து வருவதாகக் கூறியதையும் நினைத்துக் கொண்டாள்.

அவளது உள் மனம் கணவனின் வருவாயை எடை போட்டாலும், வெளிப்பகட்டான அவளது பேராசை கணவனுக்காக இரங்கவில்லை.

தனது கடமைகளை முடித்துக்கொண்டு பூஜைக்கு மலர் கொய்து கொண்டு சென்ற இந்துவை அறையில் இருந்த அன்னை சாரதாவின் படம் தடுத்து நிறுத்தியது.

இந்துவின் உள்ளம் தீடீரென அன்னை சாரதாப் போன்ற பெண் தெய்வங்கள் வாழ்ந்த உலகிலா இப்படியான அற்ப ஆசைகளைப் பூர்த்தி செய்ய விரும்பும் பெண்கள் வாழ்வது என எண்ணியது. ஆம் இந்து சாரதா முன் களவு செய்த குழந்தை போல மனம் உருகி நின்றாள். இந்துவின் மனம் இப்பொழுது தான் பெண்ணாகப் பிறந்த பெருமையை எண்ணி எண்ணிப் பூரித்தது.




கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடின மாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின் பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TK/119

# கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, செவ்வாய்
புத்தாண்டு விழாவின் பொருட்டு பொலிஸ் பகுதியினரால் நடாத்தப்படவிருக்கும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இம்மாதம் 23-ம் திகதியன்று ஆரம்பமாக விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

20-க்கு அதிகமான கழகங்கள் கலந்துகொள்ளும் இப்போட்டிகளை உடுப்பிட்டி ஏ. எம். கல்லூரி, வல்வைப் பொலிஸ் நிலையம், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையமாகிய மூன்று இடங்களில் நடத்துவதெனவும் இறுதிப்போட்டிகளை பருத்தித்துறை புத்தாண்டு விழா அரங்கில் நடாத்துவதெனவும் முடிவாகிஉள்ளது.

இரண்டாவது பிரிவுப்போட்டிகளும் ஏபரல் மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகி நடைபெறும் எனவும் இப்போட்டியில் 15 கழகங்கள் கலந்துகொள்ள இருப்பதாயும் அறியப்படுகிறது.

---

## குற்றம் உண்டா இல்லையா?

### நூலைத் தீயிலிட்டுபரிசோதனை

யாழ்ப்பாணம், செவ்வாய்
"உண்மைக்கு அழிவுண்டா? இல்லையா?என்பதனைப்பரிசோதனை ஒன்றின் மூலம் நிரூபிக்க ஏற்பாடாகியுள்ளது. இப் பரிசோதனை இம்மாத இறுதியில் காங்கேசன் துறையில் நடைபெறவிருக்கிறது.

காங்கேசன்துறை ஸ்ரீ ராமமூர்த்தி தேகப்பயிற்சிப் பாடசாலை அதிபர் திரு. த. இரத்தினசாமி 'உண்ணுவிரதியின் பொன்மொழி' என்னும் நூலை எழுதியுள்ளார். இந்த நூலில் குற்றமுண்டா இல்லையா என்பதனைப் பொதுமக்கள் முன்னிலையில் பரிசோதனை மூலம் விளக்க அவர் முடிவுசெய்துள்ளார்.

"இம்மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை காங்கேசன் துறை மயிலிட்டிக் கரைகொட்டுப் பள்ளத்துக் காணியில் 'உண்ணுவிரதியின் பொன்மொழி' என்னும் நூல் அங்கு கூடியிருக்கும் மக்கள் முன்னிலையில் எரியும் நெருப்பிலிட்டு அதில் குற்றமில்லை என்பதாக நிரூபித்து எடுக்கப்படும். அந்த நூலில் குற்றமிருப்பின் அது எரிந்து சாம்பராகிவிடும். அதில் குற்றமில்லை என்பதாக நிரூபிக்கப்பட்டபின் அந் நூலிலுள்ள வாக்குகள் வாசித்து அறிவிக்கப்படும். மக்கள் அந் நூலில் உள்ள வாக்குகளைத் தெய்வ வாக்காக நினைத்து நடக்கவேண்டும். இதனைப் பார்த்தபின் மக்கள் உண்மைக்கு அழிவில்லை என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று திரு. இரத்தினசாமி தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

அன்று மாலை ஸ்ரீ ராமமூர்த்தி தேகப்பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிபெறும் மாணவர்கள் தேகப்பயிற்சியில் சில அம்சங்கள் செய்து காண்பிப்பார்கள்.

---

## தமிழிலும் வெளியிட ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்
இலங்கைப் பல்கலைக்கழக பாடவிதானம் முதன் முறையாக தமிழிலும் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரிகிறது. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இது வரை காலமும் வெளியிடப்பட்டுவந்த பாடவிதானம் இம்முறை தமிழிலும் வெளியிடப்படவிருக்கிறது.

---

## காட்டிக்கொடுத்த கண்கள்!

தெரணியகலை, திங்கள்
பலவீடுகள் உடைத்துத்திருடிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட திருடன் ஒருவன், ருவான்வெலவில், கான்ஸ்டபிள் ஹென்றிக்கினுல் கைது செய்யப்பட்டான்.

ருவானவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அருகில் இரவு வேலை பார்த்த கான்ஸ்டபிள் ஹென்றிக் ஒரு நபரைக்கண்டார். அந்த நபரின் கண்கள், ஹென்றிக்குக்குச் சந்தேகத்தை உண்டாக்கியது. அந்த நபரிடம் கேள்விகள் கேட்க முன்னரே, அந்த நபர் பொலிஸ் கான்ஸ்டபிளைக் கண்டதும் ஓடிவிட்டார். ஆனல் ஹென்றிக் அந்த நபரைத் துரத்திச்சென்று பிடித்துக் கொண்டார். அவரைச் சோதனையிட்டசமயம், இரண்டு தங்க வளையல்கள், ஒரு மோதிரம் ஆகியவை இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.
வீடு களை உடைத்துத் திருடிய வழக்குகளில் சம்பந்தப்பட்ட, பொலிசார் தேடிய நபர்தான் இவர் என்பது பின்னர் தெரிய வந்தது.

---

## இந்திய சுங்க இலாகாவினர் இலங்கை வருகின்றனர்

கொழும்பு, செவ்வாய்
இலங்கையிலிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரங்களையும் தங்கத்தையும் கடத்திச்செல்ல எத்தனித்த முயற்சி இந்திய 'சுங்க இலாகாப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்திய சுங்க இலாகாவினர் கண்டுபிடித்ததைக் தொடர்ந்து கள்ளக்கடத்தலையே தொழிலாகக் கொண்டு அந்தச் சட்ட விரோதச் செயலைச் செய்பவர்களைக் கண்டுபிடிக்க இலங்கை சுங்க இலாகாப் பகுதியினர்களுக்கும், பொலிஸாருக்கும் அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தாம் கண்டுபிடித்த கள்ளக்கடத்தல் பற்றி விசாரணை நடத்துவதற்காக இந்திய சுங்க இலாகாப் பகுதியினர் இலங்கை வரவிருக்கின்றனன்.

---

## சிறுபான்மைத் தமிழரையும் நியமிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்
இந்து பல்கலைக்கழக சபையில் சிறுபான்மைத்தமிழர் ஒருவரையும் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை கைத்தொழில் கலாசார மந்திரி திரு. மைத்ரிபால சேனநாயக்காவைக் கோரியுள்ளது.

மகாசபை இதுசம்பந்தமாக கலாசார மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:

"முன்னேற்ற நோக்கம் கொண்ட தமிழருடன் சிறுபான்மைத் தமிழரின் பிரதிநிதி ஒருவரையும் இந்து பல்கலைக் கழக சபையில் அங்கத்துவம் வகிக்கும் வகையில் நியமிக்கப்பட்டால் நாம்மிக்க நன்றியுள்ளவர்களாக இருப்போம்.'

---

## பிரிவுபசார விருந்து

சாவகச்சேரி, திங்கள்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக இருந்து யாழ். ஸ்டான்லி அரசினர் மத்திய கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்ற திரு ஆ. மண்டலேஸ்வரனுக்கு சிரேஷ்ட மாணவர்களாலும் சர்வகலாசாலை பிரவேச வகுப்பு மாணவர்களாலும் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது.

இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஆ. க. கந்தையா இவ்வைபவத்திற்கு தலைமை வகித்தார். மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

---

## திருமலைச் செய்திகள்

### மறைந்த மாயம்

திருக்கோணமலை, திங்கள்
தம்பலகமம் உபதபால் கந்தோரிலிருந்து 743 ரூபாய்கள் கொண்ட மணியாடர்கள் வைத்து அனுப்பப்பட்ட இரு பதிவுத் தபால்கள் குறிப்பிட்ட நபர்களுக்குக் கிடைக்காமல் எங்கேயோ மாயமாக மறைந்து விட்டது. தம்பலகமம் பட்டிமேட்டைச் சேர்ந்த திரு. ஊஸ். சுப்பிரமணியம் என்பவர் கொழும்பிலுள்ள திரு. காங்கேஸ் என்பவருக்கு 363 ரூபாய் கொண்டமணியோடர் வைத்து தபாலில் அனுப்பியதாகவும் அது இன்று வரை இன்னும் கிடைக்கவில்லையென்றும், திரு. அய்யாத்துரை என்பவர் 380 ரூபாய் பெறுமதியான மணியாடர் வைத்து கொழும்பு கம்பெனி ஒன்றுக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பியதாகவும் அது இன்று வரை மேற்படி கம்பெனிக்குக் கிடைக்கவில்லையென்றும் தகவல் கிடைத்துள்ளதாம் இது பற்றி ரகசியப் பொலிஸார் புலன் விசாரணை செய்து வருவதாகத் தெரியவருகிறது.

∴ ∴ ∴

### நீர்த் தேக்கம்

கந்தளாயிலுள்ள பரவிப் பாஞ்சான் நீர்த்தேக்கத்தைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு கல்லோயா அபிவிருத்திச் சபையார் இயந்திர சாதனங்களுடன் வேலையாட்களையும் கொண்டு கந்தளாய்க்குச் சென்றுள்ளனர். 1957-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் சீரழிந்து போன இந்நீர்த்தேக்கத்தைத் திருத்தியமைக்கவே இக் கோஷ்டி கந்தளாய் சென்றுள்ளது. கல்லோயாச் சபையின் தற்காலிகத் தலைவரான திரு ஜி. பேர்ஸி சில்வாவின் வேண்டுகோளின்படி திரு. பிரக்டர் இவ்வேலையை மேற்கொண்டுள்ளார்.

∴ ∴ ∴

### அனுதாபம்

திருக்கோணமலைத் தமிழ் பேசும் வாலிப முன்னணியின் செயலவை அண்மையில் கூடிய போது ராஜன் பாபுவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்திற்கு திருக்கோணமலை தமிழரசுக் கட்சிக் கிளையின் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் தலைமைதாங்கினர்.

∴ ∴ ∴

### உயிர்தப்பினர்

திருக்கோணமலையிலிருந்து குச்சவெளிக்குப் போய்க்கொண்டிருந்த இலங்கைப போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ் ஒன்று கலப்பை யாற்றுத்துறையிலிருந்து மிதக்கும் பாதையால் இறங்கும் போது பாதை பின்னல் ஓடியதால் கடலினுள் விழுக்தது. இதனல் பிரயாணிகள் சிறிது காயத்துடன் உயிர்தப்பினர்.

∴ ∴ ∴

### பயிற்சி

திருக்கோணமலை மாவட்டத்தில் கிராம சேவையாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பத்தினன்கு பேர்களுள் சிங்களம் பேசும் சேவையாளர்கள் அனுராதபுரம் மாகாண அதிபரின் கீழ் பயிற்சியளிக்கப் படுகின்றனர். ஏனையோர் அனைவரும் திருக்கோணமலைக் கச்சேரியில் பயிற்சி பெறுகின்றனர்.

---

# வலி. மேற்கு சனசமூக நிலைய இசைவிழாப் போட்டி

சுளிபுரம், செவ்வாய்
வலி-மேற்கு சனசமூக நிலையங்களின் இசை விழா போட்டி மானிப்பாய் மொமேறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. போட்டிகளை மானிப்பாய் பட்டின சபைத தலைவர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி ஆரம்பித்துவைத்து பேசுகையில், கூறியதாவது:-

"இன்று இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழை அழியாது காத்து வரும் இயக்கமாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன. போட்டி பூசல்களை மறந்து கலையை வளர்க்கவேண்டும். கலை வளர்ச்சிக்காக தமது சேவையை சனசமூக நிலையங்கள் செய்து வருவதை பாராட்டாமல் இருக்கமுடியது." யாழ்ப்பாணத்திலுள்ள நிலையங்களில் முதன்மையான நிலையங்களாக விளங்கும் வலி-மேற்கிலுள்ள நிலையங்களைப் பாராட்டவேண்டும். யாழ்-மாவட்ட சமாஜத் தலைவர் திரு. சி. தியாகராசா, திரு. மு.சதாசிவம்ஆகியோரும் பேசினர். போட்டி முடிவுகள் வருமாறு:

### இசையரங்கம்

**தனிப்பாட்டு:**

1. இ. சின்னத்துரை:அராலி தெற்கு ச. ச. நி. 2. தா. பத்மா தேவி: தொல்புரம் மத்திய ச. ச. நி. 3. கே. சுகிர்தரத்தினம்: பண்டத்தரிப்பு ச. ச. நி. இதவபாக்கியநாதன் மூளாய் ச. ச. நி.

**நாட்டுப் பாடல்-தனி:**

1. வீ. சிவசுப்பிரமணியம்: நேருஜீ ச. ச. நி. 2. அ. மேரி நாயகி: நவாலி தெற்கு ச. ச.நி. 3. ந. சண்முகமூர்த்தி:வழக்கம் பரை ச. ச. நி.

**நாட்டுப்பாடல்-குழு:**

1. நேருஜீ ச.ச.நி 2. நவாலி தெற்கு ச. ச. நி. 3. சூரியோதய ச. ச. நி.

**தனி பிடனம்:**

1. லிங்கேஸ்வரி சங்கானை மேற்கு ச. ச. நி. 2. வே. புனித புஷ்பம் நேருஜீ ச. ச. நிலையம். 3. சி.விஜயலட்சுமி தொட்டிலடி ச. ச. நி.

**குழு நடனம்:**

1. நேருஜீ ச. ச. நி. 2. சங்கானை மேற்கு ச. ச. நி. 3. தொட்டிலடி ச. ச. நி.

**கிராமிய நடனங்கள்:**

1. நேருஜீ ச ச நி. 2. சங்கானை மேற்கு ச ச நி, 3 தொட்டிலடி ச ச நி

**வாத்தியக்கருவிகள்:**

1 அராலி தெற்கு ச ச நி
2 சங்கானை மேற்கு ச ச நி

**சமூக நாடகம்:**

1 நேருஜீ ச ச நி 2 தொல்புரம் மத்திய ச ச நி 3.தொட்டிலடி ச ச நி

**சரித்திர நாடகம்:**

1 நேருஜீ ச ச நி 2 அராலி தெற்கு ச ச நி 3 தொட்டிலடி ச ச நி

---

## சுயதேவைப் பூர்த்தி

### அரசியலுக்குஅப்பாற்பட்டது

காலி, செவ்வாய்
"நமது நாட்டின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்வது அரசியலுக்கு அப்பாற்பட்டது"என காலி அரசாங்க அதிபர் திரு ஏ. எஸ். நவரத்தினராஜா இங்கு நடைபெற்ற மகில சமித்தி மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார். மகாமோதரை பாடசாலையில் நடைபெற்ற மகாநாட்டில் திரு. நவரத்தினராஜா மேலும் பேசுகையில் இன்றுள்ள பிரச்னைகளுள் முக்கியமான பிரச்னை உணவுப்பிரச்னை தான் என்றார்.

திரு. ஜே. எப். ஏ. சொய்சா உட்படபலர் மகாநாட்டில் உரை நிகழ்த்தினர்.

அரசாங்க அதிபரின் மனைவியார் அங்கு அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 20-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிபதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர்விருப்பம் 7-30 ரி வி. பிச்சையப்பா-வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 என. வன்னியசிங்கம்-பேச்சு, 9-30 வி. நடேசன்-பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 எச். எஸ்.மத்வாச்சார்-(கோட்டுவாத்தியம்).

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி அரங்கம்-விவாதம், 7-45 'கௌஹாத்தி' - நாடகம், 8-00 எச். எஸ். மத்தவாச்சார் - கோட்டு வாத்தியம், 9-15 நல்லுரை, 9-20 பொன்னெளிர் பாரதம் - இசை நிகழ்ச்சி, 9-50 இசை மாலை.

---

## புதிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்

கொழும்பு, செவ்வாய்
புதிய உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக (நிர்வாகம்) திரு.பி. எஸ். சிறிவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்திரு.சிறிவர்த்தனவை இப்பதவிக்கு நியமிக்கும்படி பாதுகாப்பு வெளிநாட்டமைச்சு சிபார்சு செய்திருந்தது. இச்சிபார்சை பொதுச் சேவைக் கமிஷன் அங்கீகரித்ததன்பெயரில் இவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

முப்பத்தொரு வயதினரான இவர் ஒருபட்டதாரி. இவர் பதினெரு வருடகாலமாக சிவில் சேவையில் சேவை புரிந்தவர். முன்னர் மன்னர், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அரசாங்க அதிபராகவும் சுங்க இலாகாவிலும் இவர் கடமையாற்றியுள்ளார். நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சின் உதவிக் காரியதரிசியாகக்கடமையாற்றி பொலிஸ்பகுதியுடன் நேரடித் தொடர்புகொண்டுள்ளார். இவர் இம்மாதமுடிவில் கன்பராவில் நடைபெறவிருக்கும் ஐ. நா. பொலிஸ் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொள்வார்.

## மல்லாகம் கொலை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.ஜி: வாக்குமூலத்தில் உள்ளது உண்மையென்று ஒத்துக் கொள்வீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: வாக்குமூலத்தில் ஆட்கள் சத்தம் போட்டதாகச் சொன்னீரா?

சாட்சி: சொல்லவில்லை.

ஜி. ஜி: வாக்குமூலத்தில் கூட்டத்தினர் மாறி மாறி அடிபட்டதாகச் சொன்னீரா?

சாட்சி: சொல்லவில்லை.

நீதியரசர்: கந்தையா அடிபட்டு இறந்ததாக நினைத்தீர்?

சாட்சி: அடிபட்டு இறந்தார்.

ஜி. ஜி: யார் கந்தையாவை சுட்டதென்று தெரியாது என்று பொலிஸாருக்கு ஏன் சொன்னீர்?

சாட்சி: நான் அப்படிச் சொல்லவில்லை.

ஜி. ஜி: இங்கேயும் அப்படி கூறியிருக்கிறீர்?

சாட்சி: நான் மறுக்கிறேன்.

நீதியரசர்: நீதவானுக்கு வாக்கு மூலத்தில் கந்தையாவிற்கும் கனகரத்தினத்திற்கும் அடித்ததைக் காணவில்லையென்றீரா?

சாட்சி: கண்டதாகச் சொன்னேன்.

இந்நிலையில் ஜூரிமார்கள் விசாரணையை தொடர்ந்து நடத்தவிரும்பவில்லையென்று தெரிவித்தார்கள்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை குட்டிச்சுவராகி விடாதா?

நீதிமன்றங்களில்வரும் வழக்குகளின் மூலம், குடியால் வரும் கேடுகளைச் சுலபமாக நம்மில் யாரும் உணரலாம்.

அப்படி உணர்ந்திருந்தாலும் இந்தச் சாபத்தீட்டை ஒழிகக இங்கு எந்த அரசியல்வாதியோ, கட்சியோ, பொதுஸ்தாபனமோ முன்வரவில்லை. இது பெரிய துரதிருஷ்டம்.

மது அரக்கனுக்கு அடிமைப்பட்டவர்கள், எவ்வளவு முயன்றாலும், அவனிடமிருந்து விடுபடுவது மிகவும் சங்கடம் தான். ஆனால் நம்மால் முடியாதது இறைவனால் முடியும். ஆகவே இந்த சாபத்தீட்டிலிருந்து விடுபட முயலுபவர்கள் உண்மையாக இறை அருளை இதற்கு வேண்டினால், அந்தச் சக்தி இந்த விடுதலைக்குத் துணை செய்யுமல்லவா? நம் தீய பழக்கங்களிலிருந்து நம்மை விடுவிக்கத்தானே இறை அருள் வேண்டும்!

* * *

உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே

—திருநாவுக்கரசர்

# இந்தியாவுக்கு அந்நிய ஆயுத உதவி

## நிபந்தனைகள்பற்றி சாவன்விளக்கம்

புதுடில்லி, மார்ச் 19

சீனத் தாக்குதலைச் சமாளிப்பதற்கு அமெரிக்காவிடமிருந்தும், பிரிட்டனிடமிருந்தும் என்ன நிபந்தனையில் ஆயுதங்கள் வாங்கப்படுகின்றனவென்பதை இந்திய பாதுகாப்பு மந்திரி இன்று லோகசபையில் தெரிவித்தார்.

எந்தக்காரியத்துக்காக இந்த ஆயுதங்களும் படைசாதனங்களும் வாங்கப்படுகின்றவோ அந்தக் காரியம் முடிந்தபின் அவைகளைத் திருப்பிக்கொடுக்கலாம் என்று மந்திரி சாவன் தெரிவித்தார்.

இந்த ஆயுதங்களையும் சாதனங்களையும் உபயோகிப்பதை மேற்பார்வையிட அந்தந்தநாட்டின் பிரதிநிதிகளுக்கு அனுமதியளிக்கப்படுமென்றும் பிரிட்டனின் ஆயுதங்களும், சாதனங்களும் பிரிட்டனின் செலவிலேயே இந்தியாவுக்கு வந்துசேருகின்றன வென்றும் திரு. சாவன் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் பணம் சம்பந்தமான பேச்சு எதுவும் இன்னும் முடியவில்லை யென்றும் அந்நியசெலாவணியில் கொடுக்கப்படவேண்டியேற்பட மாட்டாதென்றும் திரு. சாவன் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

மல்லாகம் கத்தோலிக்கபாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவரும் முன்னாள் சம் பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராய் இருந்தவருமாகிய பண்டிதர் த. சிவசம்புநாதர் நேற்றுக்காலை காலமானார். இன்று காலை 8 மணிக்கு அவரது ஈமக்கிரியைகள் சண்டிருப்பாயிலுள்ள அவர் மனைவி சிவக்கொழுந்துவின் இல்லத்திலும், மானிப்பாய் பிட்டிலி மயானத்திலும் நடைபெறும்.

## வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

சுன்னாகத்தில் மனைவியும் குழந்தையும் மரணமானதையொட்டி சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு 1500 ரூபா பிணையில் விடப்பட்ட கணவன் சிவகுரு தவரத்தினம் இன்று மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜரானார். வழக்கைத் தாக்கல் செய்த சுன்னாகம் பொலிசார் அரசாங்க பரிசோதகரின் பரிசோதனை அறிக்கை இன்னும் வரவில்லையாதலால் வழக்கை வேறு ஓர் தவணைக்கு ஒத்திவைக்கும்படி கேட்டனர். நீதிபதி பொலிசாரின் வேண்டுகோளை ஏற்று வழக்கை அடுத்த மாதம் 9-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இச்சம்பவத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி தவரத்தினம் அன்னமலர் (வயது 25) அவரின் புதல்வன் பிரேமச்சந்திரன் ஆகியோர் மரணமானார்கள்.

எதிரி தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

# மத்துகமைப்பகுதியில் தொழிலாளர் வேலைநிறுத்தம்

## இரு யூனியன்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும், லங்கா தோட்ட தொழிலாளர் சங்கமும் தங்கள் மத்துகம கிளைகளில் உள்ள சகல தோட்டங்களிலும் பொது வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தத் தீர்மானித்து வருவதாக லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கப்பொதுக்காரியதரிசி திரு. என். பி. தருமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த உத்தேச வேலைநிறுத்தம் இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் அங்கத்துவ தோட்டங்களையே பாதிக்கும் எனவும் திரு. தருமலிங்கம் தெரிவித்துள்ளார். இந்த உத்தேச வேலைநிறுத்தம் அகலவத்தையை சேர்ந்தபிம்புறுபகுதியிலும் தெபுவனவைச் சேர்ந்த தோர்செற பகுதியிலும் இம்மாதம் நாலாந் திகதி தொடக்கம் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தத்திற்கு அனுதாபமாகவே நடைபெறும். இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தைச்சேர்ந்த இத்தோட்ட நிர்வாகங்கள் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்துவிட்டன. இப்பகுதிகளில் தொழிலாளர் எண்ணிக்கையை குறைத்துக் கொண்டதுமல்லாமல் செய்ய வேண்டிய வேலையும் 40 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத்தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களும் இந்த அனுதாப வேலைநிறுத்தத்தில் பங்குகொள்ளுமாறு அழைக்கப்படும் எனவும் தொழிற்சங்கங்களின் இணைப்புக்கமிட்டிக்கு இந்த வேலைநிறுத்தம்பற்றிய இறுதி முடிவு தெரிவிக்கப்படும்எனவும் திரு. தருமலிங்கம் தெரிவித்துள்ளார்.

## வகுப்புவாத ரீதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் முஸ்லிம்களையும் கொண்ட கோஷ்டியொன்று இவர்களைத் துன்புறுத்திவந்துள்ளது.

இவர்களது கடையில் பொருள்கள் வாங்கக்கூடாது எனவும் இவர்கள்பிரசாரம் செய்து வந்துள்ளனர். அத்துடன் இவர்களிடம் பெற்ற கடனையும் திருப்பிக்கொடுக்க வேண்டாமென மக்களிடம் இக்கோஷ்டியினர் கூறியுள்ளனர்.

சில நாட்களுக்குமுன் இந்த சிங்களவரில் ஒருவரைக்கொலை செய்ய முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் தப்பிவிட்டார்.

திரு. விக்கிரமசிங்கா மேலும் கூறுகையில், தாம் ஒரு வகுப்புவாதியின் நிலையில் இவற்றைக் கூறவில்லையென்றும் இவ்வித விஷயங்களைத் தெரிவிப்பது தமது கடமை என்பதாலேயே தாம் இவற்றை வெளியிட வேண்டியுள்ளது என்றும் கூறினார்.

திரு. பீலிக்ஸ் இதற்குப் பதிலளிக்கையில், இதுவிஷயம் பற்றிப் பொலிசாரிடம் அறிவிக்குமாறும் இவ்விதம் செய்திருந்தால தாம் பொலிஸிடம் இதுபற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கோரலாம் எனவும் கூறினார்.

## அரியாலை ஐக்கியசங்கம்

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை மத்திய ஐக்கிய பண்டகசாலையின் பொதுக்கூட்டம் சமீபத்தில் அதன் தலைவர் திரு. வை. தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வை. தில்லையம்பலம், உபதலைவர்: வே. தருமலிங்கம், காரியதரிசி: மூ. தாமோதரம்பிள்ளை, தனாதிகாரி: சு. தாமோதரம்பிள்ளை.

## ஜெர்மனியர் சிங்களத்தில் பேசினர்

கண்டி, செவ்வாய்

பல்கலைக்கழக கலை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட ஜெர்மன் தூதுகோஷ்டியைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் சிங்களத்தில் உரையாற்றினர்.


மகத்தான 2-வது வாரம்!

வீர காவியம்!!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)

மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (ரூகலை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிறார்கள்

★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிறார்கள்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்

சாவித்திரி குமாரி ருக்மணி

வி. நாகையா

முத்துலட்சுமி

எஸ். வி. ரங்கராவ்

ஜெமினி சந்திரா

எஸ். வி. சுப்பையா

ஏ. கருணாநிதி

டி. கே. ஷண்முகம்



மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனோகரா (யாழ்ப்பாணம்)

அசோக்குமார், ஷக்கிலா நடித்த

வறன்ட்



வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி யாழ்ப்பாணம்

125-வது வருடாந்த விழா

மார்ச் 21 — பி. ப. 3 மணி—கைத்திறன் பொருட்காட்சி

மார்ச் 22 — பி. ப. 3 மணி—கைத்திறன் பொருட்காட்சி
பி. ப. 5-30 மணி — கலை நிகழ்ச்சி

மார்ச் 23 — பி. ப. 4 மணி—தேநீர் விருந்து
பி. ப. 5 மணி—பொதுக்கூட்டம்
பி. ப. 6 மணி—கலைநிகழ்ச்சி

மார்ச் 24 — மு. ப. 8-30 மணி — யாழ்ப்பாணம் சென்பீட்டர் தேவாலயத்தில் தோத்திர ஆராதனை.

பழைய மாணவிகளும் பெற்றோர்களும் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவும்

எம். தம்பையா,
அதிபர்.


## சீனிபற்றிய செய்தி தவறு

### அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் சீனி இறக்குமதி செய்வதுபற்றி பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானது என உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.